Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 25 இதழ் - 5 மே 2012

தனிப் பிரதி ரூ. 9/-



முகாமில் கலந்து கொண்ட வாலிபர்கள்



முகாமில் கலந்து கொண்ட பெண்களில் ஒரு பகுதி

## வாசகர்களின் அன்பான கவனத்திற்கு

- ❊ திருமறை ஆசான் இதழை தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்புவோர்கள் கடித மூலம் எங்களுக்கு கண்டிப்பாக தெரிவிக்க வேண்டும். அப்படித் தெரிவிக்காதவர்களுக்கு இதழ் நிறுத்தப்படும்.
- ❊ இந்த பத்திரிக்கை ஊழியத்தை ஜெபத்தாலும், பொருளாலும் தாங்குங்கள்.
- ❊ திருமறை ஆசான் மாத இதழை ஆன்மீக சிந்தை உள்ளவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.

## திருமறை தியானம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| பொதிகை | TV | ஞாயிறு | காலை | 5:30 – 6.00 |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7.00 – 7.15 |
| தமிழன் | TV | சனி | காலை | 7.15 – 7.30 |

இந்நிகழ்ச்சிகளைப் பார்த்து உண்மை சத்தியத்தை அறிந்து கீழ்ப்படியுங்கள்.

## ஆசானின் போதனையில்....


1 . ஆசிரியர் உரை ..................................... 1
2 . ஏன் கிறிஸ்தவம் மிகவும் வித்தியாசமானது? ..................................... 9
3 . எந்தோரில் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ சாமுவேலை எழும்பி வரச் செய்தாளா? ........ 14
4 . பெண்கள் பகுதி ..................................... 16
5 . நிழலும், நிஜமும் ..................................... 20
6 . வாலிபர் பகுதி ..................................... 25
7 . சிறுவர் பகுதி ..................................... 27
8 . வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ..................................... 29


- ✦ ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- ✦ முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- ✦ இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- ✦ M.O. செய்பவர்கள் தகவலுக்கான பகுதியில் உங்கள் தெளிவான விலாசத்தை கண்டிப்பாக எழுதவும்.
- ✦ அஞ்சல் வழியில் வேதாகம படிப்பவர்கள் உங்களது தொலை / அலை பேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 25 MAY 2012 Issue - 5


ஆசிரியர் உரை

## உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று

இப்பாழுலகை மீட்கும்படியாக மானிட ரூபமெடுத்து வானத்திலிருந்து இறங்கி வந்த இயேசுவானவர் நன்மை செய்கிறவராகப் பெலஸ்தீனா தேசம் முழுவதும் சுற்றித் திரிந்தார் என்பது வேதம் வெளிப்படுத்தும் ஓர் உண்மை. அப்படி நடந்து திரிந்த இயேசுவானவர், எண்ணிலடங்கா அற்புதங்கள் செய்த தோடு ஏராளமான காரியங்களை உபதேசங்களாகப் போதித்தார். அவருடைய வார்த்தைகளை நாம் கூர்ந்து கவனித்தால், அவை ஒரே விதமாக இல்லாமல், ஒரு பெரும் கலவையின் கூறாகக் காணப்படுகிறது. ஆம், அவைகளில் பாசமும், பரிதாபமும் இருக்கும்; நேசமும், நெருக்கமும் இருக்கும்; உரிமையும், உருக்கமும் இருக்கும்; கனிவும், கண்டிப்பும் இருக்கும்; எச்சரிப்பும், எதிர்பார்ப்பும் இருக்கும்; அத்தோடு ஏக்கமும், ஏமாற்றமும் கூட இருக்கும். இப்படித்தான் அவருடைய பிரசங்கத்தின் பாணியும், உபதேசத்தின் தன்மையும் இருந்தது. ஜனங்களின் சரீரத் தேவைகளின் ஆழத்தை அறிந்தவராகவும், அதைவிட முக்கியமாக, அவர்களின் ஆவிக்குரிய அவசியங்களின் நாடித்துடிப்பை உணர்ந்தவராகவும் இருந்தார். இவைகளினடிப்படையில் தனது உபதேசங்களை அமைத்தபடியால் தான், இன்றளவும் உலகம் அவரை ஓர் ஒப்பற்ற பெரும் போதகர் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட இயேசுவானவர்தான், ஒரு சமயம் மிகுந்த ஏமாற்றமடைந்தவராய், உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று, என்று கண்ணீர் மல்கக் கூறியுள்ளார். இப்பூமியின் வாழ்க்கையில் ஒரு

காரியத்தைச் செய்வதற்கும், செய்யாமலிருப்பதற்கும் மனது மிகவும் முக்கியமானது. ஒன்றைச் செய்தே ஆக வேண்டுமென்ற மனது இருக்குமானால், இமயம் கூட சருகு போல தோன்றும். அதே நேரத்தில், ஒன்றைச் செய்யக் கூடாது என்று நினைத்து விட்டால் துரும்பு கூட உத்திரமாகக் காட்சி தரும். குறிப்பாக, ஆவிக்குரிய வாழ்க்கையில் மனமில்லையானால் ஓர் அங்குலம் கூட நகர முடியாது. இந்த உண்மையைப் பச்சையாக உணர்ந்திருந்தபடியால் தான், ஆண்டவருக்கு முன்னோடியாய் வந்த யோவான் ஸ்நானகனும், இயேசுவும் மனந்திரும்புங்கள், மனந்திரும்புங்கள் என்று கத்திக் கத்திப் பிரசங்கித்தனர்.

சரி, இப்பொழுது, நம்முடைய இயேசுவானவர், "உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று" என்று எப்பொழுது சொன்னார், யாரைப் பார்த்துச் சொன்னார், எங்கிருந்து சொன்னார், ஏன் சொன்னார் என்பது பற்றியெல்லாம் கொஞ்சம் தெரிந்து கொண்டால், இத்தலைப்பைச் சிறப்பாக அறிந்து கொள்வதற்கும், இதிலிருந்து தேவன் இம்மாதம் வெளிப்படுத்த விரும்பும் பாடங்களைப் புரிந்து கொள்வதற்கும் மிகுந்த ஒத்தாசையாக இருக்கும். ஆகவே, நமது வழக்கத்தின்படியாக உள்ளே செல்லுவோம்.

சுமார் மூன்றரை ஆண்டுகள் பரலோக தேவனின் திருப்பணியை ஓய்வு ஒழிச்சலின்றிச் செய்து வந்த இயேசுவின் பூமிக்குரிய வாழ்வின் நாட்கள் முடியும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. கொல்கொதா மலையின் உச்சிக்கு பாரச் சிலுவையோடு ஊர்ந்து செல்லச் சில நாட்கள் தான் எஞ்சி இருந்தது. அப்பொழுது தான் எருசலேமின் குடிகளைப் பார்த்து, குறிப்பாக தேவாலயத்தைப் பார்த்து இப்படியாகக் கதறி யுள்ளார். "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிற வளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று" [மத். 23:37] என்று.

இந்த எருசலேமுக்காக, எருசலேமின் ஜனங்களுக்காகத் தேவன் ஆதியிலே இருந்து செய்த காரியங்கள் கொஞ்ச நஞ்ச மல்ல. ஆதியாகம புத்தகத்திலேயே இடம் பெற்று, இன்றளவும் உலகின் முதன்மைப் பட்டணங்களுள் ஒன்றாகத் தொடர்ந்து திகழ்ந்து வருவது எருசலேம் மாத்திரமே. வேறு எதற்கும் இச்சிறப்பு கிடையாது. இப்பட்டணத்தை வேதாகமம் பரிசுத்த ஸ்தலம் [சங். 46:4] என்றும், உண்மையுள்ள நகரம் என்றும் [ஏசாயா 1:21] பரிசுத்த நகரம் [மத். 4:5] என்றும் அழைக்கிறது.

இப்படி, தேவனுடைய இருதயத்தில் இடம் பிடித்த பட்டணமாக இருந்து, பரிசுத்தம், உண்மை என்ற உன்னத வார்த்தைகளுக்கு உரிமை கொண்டாடும் ஒன்றாக இருந்தாலும், இதன் செயல்பாடு

தேவனுக்குப் பிரியமானதாக தொடர்ந்து இருக்கவில்லை. இயேசு வருவதற்குப் பலகாலம் முன்பாகவே, தேவனுக்கு விரோதமான பாதையில் இப்பட்டணம் பயணம் செய்ய ஆரம்பித்ததோடு, தேவ திட்டத்திற்கு எதிராகச் செய்யவும் தன்னில் துணிகரம் கொண்டுவிட்டது. தேவன், தன்னுடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு அவர்களைத் தொடர்ந்து எச்சரித்து வந்தார். "எருசலமே, நீ இரட்சிக்கப்படும்படிக்கு உன் இருதயத்தைப் பொல்லாப்பறக் கழுவு, எந்த மட்டும் அக்கிர நினைவுகள் உன் உள்ளத்திலே தங்கும்" [எரே. 4:14] என்றும், இன்னும், எரேமியா 6:8-ல் எருசலேமே, என் ஆத்துமா உன்னை விட்டு பிரியாதபடிக்கும், நான் உன்னைப் பாழும் குடியற்ற தேசமும் ஆக்காதபடிக்கும் புத்தி கேள் என்றும் கூறியுள்ளார்.

தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்குச் செவி கொடுத்துத் திருந்தாத எருசலேமுக்காகவும், பூமியின் ஏனைய மக்களுக்காக வும் தான், தன் கடைசி கட்ட முயற்சியாகத் தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பி அவருடைய திருவார்த்தைகளுக்காகிலும் செவிகொடுப்பார்களென்று எதிர்பார்த்தார். அவருக்கும் அவர்கள் செவிகொடுக்கவில்லை. மத். 23:37ம் வசனத்தில் இயேசு ஆண்டவர் எத்தனை தரமோ என்று கூறி, தான் எடுத்த முயற்சி எவ்வளவு அதிகமானது என்பதை வெளிப்படுத்துவதோடு, எடுத்த முயற்சிகளின் தன்மை பற்றியும் இப்படியாகக் கூறுகிறார். "கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்க்கும் வண்ணமாக" என்று. நம்ம ஊர்க் கோழிகள் தன் குஞ்சுகளைப் பாதுகாப்பதற்குப் படும் பிரயாசை களைக் காட்டிலும், வனாந்திரப் பகுதிகளை அதிகம் கொண்ட பெலஸ்தீனா தேசத்துக் கோழிகள் அதிக விழிப் போடிருந்து செயல்பட வேண்டும். ஏனெனில், உடனடியாக ஓடி ஒதுங்குவதற்கு முட் புதர்களோ, பதுங்குவதற்குத் தோதான அடர்ந்த செடி கொடிகளோ அங்கு இல்லை.

இப்படியாகப் பிரயாசை எடுத்தும் அவர்கள் திருந்த வில்லை. திருந்துவதற்கு மனம் இல்லாமற் போயிற்று. யோவான் நற்செய்தி யாளரும் இதைத்தான் கூறுகிறார். "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ள வில்லை" என்று [யோவா 1:11]. அப்படி அவர்கள் ஏற்றுக்கொள்ளாம லிருப்பதால் அவர்கள் மீது வரப்போகும் விளைவை எண்ணிப்பார்த்தார். வசனம் 38ல் இதோ உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. எருசலேம் பாழாகிப் போகும் என்பதையும், அதின் குடிகள் அழிக்கப்படுவார்கள் என்பதையும் நினைக்கும் போது அவருக்கு நெஞ்சு பொறுக்கவில்லை. ஏனெனில், உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க அவர் வராமல் [யோவா 3:17]. இழந்து போன எருசலேமின் குடிகள் போன்றோரை இரட்சிக்கும்படியாகவே வந்தார். [லூக். 19:10] ஆகவே தான், எருசலேமை நினைத்துப் புலம்பினார்.

சரி, பழைய ஏற்பாட்டின் காலத்திலும், இயேசுவின் நாட்களிலும் தான் இந்த எருசலேமின் குடிகள் தங்கள் பிடரியைக் கடினப்படுத்தி னார்களென்று நாம் நினைக்கத் தேவையில்லை. இயேசு அவர் களுக்காக வந்து, வாழ்ந்து, மரித்து, உயிர்த்துப் பரமேறி சுமார் 2000 ஆண்டுகள் ஆகிவிட்ட இன்றைய நாட்களிலும், அவர்களின் நிலை அப்படியே தான் உள்ளது. சாலமோன் கட்டிய தேவாலயத்தைச் சுற்றிலுமிருந்த மதில் சுவரின் எஞ்சிய பகுதி என்று நம்பப்படும் ஒரு "குட்டிச்சுவர்" இருக்கிறது. அதற்கு புலம்பல் சுவர் (Wailing Wall) என்று பெயரிட்டிருக்கிறார்கள். இந்தப் பொல்லாத யூதர்கள், ஆண்களும், பெண் களுமாக திரளாக வந்து, அந்த குட்டிச் சுவரைத் தொட்டுக் கொண்டும், பிடித்துக் கொண்டும், அதில் மோதிக் கொண்டும் ஓவென அழுகிறார்கள். மேசியாவே வாரும், தேவாலயத்தை திரும்பவும் கட்டும், எருசலேமில் வீற்றிருந்து அரசாளும் என்று முறையிடுகிறார்கள். இதே எருசலேமின் ஒரு பக்கம், மேசியாவாகிய இயேசு இரட்சகர் வந்து போனதற்குப் பலமான சாட்சியாக திறந்து கிடக்கும் கல்லறை இருக்கிறது. ஆனால், மறுபக்கமோ, மேசியாவே வாரும் என்று ஒப்பாரி!!.

எருசலேமின் குடிகள், இயேசுவை ஏற்றுக் கொள்ளாததற்கு நிறைய காரணங்களை நாம் அடுக்க முடியும் என்றாலும், அவைகளில் பிரதானமாக ஒரு மூன்றை நாம் பார்த்து சில பாடங்களைக் கற்றுக் கொள்வோம்.

## I தேவனுடைய வார்த்தைகளை அற்பமாக எண்ணினார்கள்

எருசலேமின் குடிகள் இயேசுவுக்குச் செவி கொடுக்க மன மில்லாமற் போனதற்கான காரணங்களில் முதலாவதாக, அவர்கள் வேத வசனங்களை அற்பமாய் எண்ணியதைக் கூறலாம்.

மோசேயைக் கொண்டு பிரமாணங்களை இஸ்ரவேலர் களுக்குக் கொடுத்த தேவன், அப்பிரமாணங்களுக்கு அவர்கள் என்ன மரியாதை கொடுக்க வேண்டுமென்பதையும் வெளிப்படுத்தி விட்டார் [உபா. 5:1] மோசேயின் காலத்துக்குப் பிறகும் தேவன் அவருடைய வார்த்தைகளின் படியாகச் செய்வது மிகவும் அவசியம் என்பதை மீண்டும் வெளிப்படுத்தி யுள்ளார். "இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிரு என்று" [யோசுவா 1:8]. ஆனால், இவர்களுக்கோ, வேத வாக்கியங்கள் என்ன சொல்லுகிறதென்பதைக் குறித்த பாரம் ஒரு போதும் பெரிதாக இருந்ததில்லை.

வேத வாக்கியங்களைக் கொண்டு இவர்கள் இயேசுவை அறிந்தி ருக்க முடியுமா என்று பார்த்தால், நிச்சயமாக முடியும் என்பதே பதிலாக உள்ளது. எப்படியெனில், " ....என்னைக் குறித்து சாட்சியிடுகிறவைகள் வேத வாக்கியங்கள் " என்று இயேசு அழகாகக் கூறியுள்ளார். [யோவா 5:39] இயேசுவின் கூற்றை பிலிப்பு மெய்யாக்கி யுள்ளதைப் பாருங்கள். பெத்சாயிதா ஊரானாகிய பிலிப்பு, கபடற்ற உத்தம இஸ்ரவேலனாகிய

நாத்தான்வேலைக் கண்டு, நியாயப் பிரமாணத்திலே மோசேயும், தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம் என்றான். [யோவா 1:45]. அருமையானவர்களே, வேத வாக்கியங்களில் உள்ளதை எருசலேமின் குடிகள் புரிந்து கொள்ள முடியாமற் போனது, வேத வாக்கியங்களின் குறைபாடல்ல. மாறாக, இயேசு வானவர் மத். 13:15–ல் சொல்லியுள்ளது போல அவர்கள் இருதயம் கொழுத்திருந்ததே காரணம்.

சரி, இப்படிப்பட்ட, வேதவசனங்களின் சாட்சியும் போதா தென்று, யோவான் ஸ்நானகனும், இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்தார் [யோவா 1:34]. இந்த யோவானின் சாட்சியையும் ஜனங்கள் ஏற்றுக்கொள்ளாத போது, இயேசு சொன்னதைத் தான் கொஞ்சம் பாருங்களேன்! "யோவானுடைய சாட்சியைப் பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு; அதென்னவெனில், நான் நிறைவேற்றும் படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்து வருகிறது மான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறது" என்றார் [யோவா 5:36] இதற்கு மேலும், இயேசு தேவனுடைய குமாரனென்று ஏற்றுக்கொள்வதற்கு வேறு என்ன தான் சாட்சி வேண்டும்? சொல்லுங்கள்!

எருசலேமின் குடிகளும், யூதர்களும் இப்படித் தரம் தாழ்ந்து நடந்திருக்கிறார்களே என்று எண்ணி, வியந்து நிற்கும் அருமையான தேவனை நேசிக்கும் ஜனமே! நம்முடைய வாழ்வில் நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்? வேத வாக்கியங்களுக்கு ஏப்படிப்பட்ட மரியாதை கொடுத்து வாழ்ந்து கொண்டுள்ளோம்? வேதவாக்கியங்களின் ஒட்டு மொத்த போதனை என்ன என்றும், இன்றைக்கு என்னைக் கட்டுப் படுத்தும் உபதேசம் எது என்பதையும் நாம் கண்டுபிடித்து விட்டோமா? சொல்லுங்கள்.

அன்பானவர்களே, வேத வாக்கியங்களுக்கு முக்கியத் துவம் கொடுக்காமல் மனித கோட்பாடுகளுக்கும், பாரம்பரியங் களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தபடியால் தான், குட்டிச் சுவற்றைக் கட்டிப் பிடித்து அழ வேணடிய அவசியம் யூதர்களுக்கு வந்திருக்கிறது. ஒருவேளை, நாமும் அவர்களைப் போல புதிய ஏற்பாட்டு உபதேசத்தை அற்பமாக எண்ணி, இயேசு கட்டின ஒன்றான மெய்ச் சபையைப் பற்றி [மத். 16:18] அக்கறையில்லாமல் வாழ்வோமானால், நரகத்திற்குப் போய் அங்கே நித்திய காலமாய் அழவேண்டிய நிலை வந்து சேரும். ஆகவே, இயேசுவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்கு மதிப்பளித்து நமது ஆன்மீக வாழ்வை நடத்துவோம்.

## II தங்களுடைய காரியங்களில் நாட்டமுடையவர்களாக இருந்தனர்

எருசலேமின் குடிகள், இயேசுவின் வார்த்தைகளுக்குச் செவி கொடுக்க மனமில்லாமற் போனதற்கான இரண்டாவது காரணமாக,

அவர்கள் தங்களுடைய காரியங்களில் அதிக நாட்டமுடையவர்களா யிருந்ததைக் கூறலாம்.

பூமியில் வாழும் ஒருவன் பூமிக்கடுத்த சில காரியங்களில் நாட்டமுடையவனாக இருப்பதில் எந்தத் தவறும் இல்லை. ஏனெனில், இப்பூமியில், தேவன் அனுமதிக்கிற காலமெல்லாம் அவன் வாழ்ந்தாக வேண்டும். அதே நேரத்தில், தேவனுக்கடுத்த காரியத்திற்கும், சொந்தக் காரியத்திற்குமுள்ள வேறுபாடு தெரிந்தவனாக ஒருவன் இருக்க வேண்டும். இந்த அறிவு எல்லாருக்கும் இருக்க வேண்டுமென்பது தேவனுடைய விருப்பம், இயேசுவின் எதிர்பார்ப்பு. இதற்காகத்தான், இயேசுவானவர், "ஒரு மனுஷன் பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணி அநேகரை அழைப்பித்தான்" என்ற உவமையைச் சொன்னார் [லூக். 14 ஆம் அதி] அவ்வுவமையில் மூன்று பேருமே போக்குச் சொல்லத் தொடங்கி, தங்களுடைய காரியங்கள் தான் பெரிது என்பதை வெளிப்படுத்தினர்.

இயேசுவின் காலத்தில் வாழ்ந்த ஜனங்களுக்கு பக்தி வாழ்வும், ஆராதனைக்குரிய காரியங்களும் கூட ஆதாயத் தொழிலாக மாறிவிட்டது. ஆகவேதான், உலகின் பல பாகங்களிலிருந்து எருசலேமுக்கு வருபவர்களைக் கொள்ளையடிக்க ஆரம்பித்து விட்டனர். அன்பான இயேசுவுக்கு, இவர்களின் இந்தச் சுயநலப்போக்கு ஆத்திரத்தையும், கோபத்தையும் ஏற்படுத்தியது. சவுக்கெடுத்து அவர்களை விரட்டியதோடு, என்னுடைய வீட்டை கள்ளர் குகையாக்கி னீர்கள் என்றும் சாடினார் [மத். 21:12,13].

இங்கே, நாம் கவனிக்க வேண்டிய ஒரு காரியம், இவர்கள் இப்படிப்பட்ட வேத விரோதச் செயலைத் தெரியாமல் செய்ய வில்லை என்பது. எப்படியெனில், இயேசு லாசருவை உயிரோடே எழுப்பின தற்குப் பிறகு கூடின ஆலோசனைச் சங்கத்தார், நாம் இவனை இப்படி விட்டுவிட்டால் எல்லாரும் இவனை விசுவாசிப் பார்கள்; அப்பொழுது ரோமர் வந்து "நம்முடைய ஸ்தானத்தை யும் ஜனத்தையும் அழித்துப் போடுவார்களே" என்றார்கள் [யோவா 11:47,48] ஆக, இந்தத் திருடர்களின் சிந்தையெல்லாம் தொழில், வருமானம், ஸ்தானம்! பக்தி என்பது ஒரு வேஷம். அப்படித்தானே தெரிகிறது!

அன்பானவர்களே, இயேசுவின் காலத்து எருசலேமின் குடி களோடும், யூத ஜனங்களின் நிலையோடும் இன்றைய கிறிஸ்தவத்தின் சூழ்நிலையை ஒப்பிட்டால் அப்படியே அச்சில் ஊற்றி எடுத்தாற் போல இருக்கிறது. ஆச்சரியமாக இருக்கிறதா? அன்றைக்கு எப்படி தேவனால் அனுப்பப்பட்ட இயேசுவையும், அவருடைய உபதேசத்தையும் ஏற்றுக் கொண்டால் தொழிலும், வருமானமும், அந்தஸ்தும் போச்சு என்று எண்ணினார்களோ, அதேபோல, இன்றைக்கு இயேசுவால் கட்டப்பட்ட

ஒன்றான மெய்ச் சபையையும், புதிய ஏற்பாட்டு உபதேசத்தையும் ஏற்றுக் கொண்டால் தொழிலும், வருமானமும், அந்தஸ்தும் போய்விடும் என்று அநேக பிரசங்கிகளும், பாரம்பரியமும், கௌரவமும், பகட்டும் போய் விடுமென்று மார்க்க முன்னோடிகளும், இனிமேல் கொள்கையையும், நம்பிக்கையையும் மாற்றினால் அது மரியாதைக் குறைவை ஏற்படுத்து மென்று சராசரி கிறிஸ்தவனும் எண்ணுகிறார்கள். சரிதானே!

ஆனால், நாம் என்றைக்கு நமது காரியங்களுக்கான சிந்தை யைக் குறைத்து, அவருடைய காரியங்களில் நாட்டம் செலுத்துகிறோ மோ அப்போது தான் தேவனுக்கடுத்தவைகளுக்கு முழுமையாகக் கீழ்ப் படியும் மனதைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## III மற்றவர்களுடைய நினைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்

எருசலேமின் குடிகள் இயேசுவின் வார்த்தைகளுக்குச் செவி கொடுக்க மனமில்லாமற் போனதற்கான இன்னுமொரு காரணமாக, மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்கள் செயல்பட்டதைக் கூறலாம்.

இவர்கள் இப்படித்தான் செயல்பட்டார்கள் என்று அவர்கள் வேத வசனங்கள் கூறுகிறது. அதுவும், ஒரு முறை அல்ல, பலமுறை. ஆம், யோவான் நற்செய்தியாளனுடைய நூலில், தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவரிலொருவர் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்? [யோவா 5:44] என்று இயேசு கேட்டுள்ளார். இன்னும், அதே நூலின் 12 ஆம் அதிகாரம் வசனம் 42,43 சொல்லுவதையும் கவனியுங்கள். "ஆகிலும் அதிகாரி களிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படி யிருந்தும் ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்காதபடி, பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள். அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பி னார்கள்". மனிதர்களுடைய எண்ணங்களுக்கு அவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்தார்களென்பதற்கு இதை விட வேறு என்ன சான்று வேண்டும்?


ஆனால், பழைய ஏற்பாட்டுப் பக்தன் ஆபிரகாமும், புதிய ஏற்பாட்டில் பவுலடியாரும் இக்காரியத்தில் எப்படிச் செயல்பட்டார் களென்று உங்களுக்கு நினைவிலிருக்கிறதா? கர்த்தர் ஆபிரகாமை நோக்கி; நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப்போ [ஆதி. 12:1] என்று அழைத்த போது, அவன் யாருடன் ஆலோசனை செய்தான்? ஊரும், உறவும், நட்பும் என்ன நினைக்கு மென்று அவன் எண்ணியிருந்தால், தேவனுடைய வார்த்தைகளுக்குக்

அவனால் கீழ்ப்படிந்திருக்க முடியுமா? விசுவாசிகளின் தகப்பன் என்ற பெருமை அவனுக்குக் கிடைத்திருக்குமா? சொல்லுங்கள்.

அதுபோலத்தான் அப்போஸ்தலன் பவுலும். தன் இரட்சிப்பு விஷயத்தில் மாற்றாரின் கருத்துக்கு மருந்துக்குக் கூட அவன் மதிப்பளிக்கவில்லை. இயேசுவின் அழைப்பைத் தான் ஏற்றுக் கொண்ட விதம் பற்றிப் பின்னாளில் கலாத்தியருக்கு நிருபம் எழுதும்போது இவ்விதம் கூறியுள்ளார். "தம்முடைய குமாரனை நான் புறஜாதி களிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்த போது, உடனே நான் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் யோசனை பண்ணவில்லை" [கலா. 1:16] என்று. இப்படிப்பட்ட கீழ்ப்படிதலைத்தான் தேவன் நம் ஒவ்வொரு வரிடமும் எதிர்பார்க்கிறார்.

அருமையானவர்களே, இன்றைய உலகமும், கிறிஸ்தவ சமுதாயமும் ஊருக்கும், உறவுக்கும், நட்புக்கும், மாம்சத்திற்கும், இரத்தத்திற்கும், மதிப்பளிக்காமல், தேவனுடைய வார்த்தைகளுக்கு மாத்திரம் செவிகொடுத்துக் கீழ்ப்படிவதில் எந்தளவு சிறந்து விளங்கு கிறது? இது தான் சத்தியம் என்றும், இதுதான் இந்த வசனத்தின் பொருள் என்றும், இவைகள் தான் இரட்சிப்பின் திட்டத்துக்கான படிகள் என்றும், இதுதான் இயேசு வாக்களித்துக் கட்டின சபையென்றும் சொன்னால், எத்தனை பேர் அட அப்படியா, இத்தனை நாள் எனக்கு விளங்காமற் போய்விட்டதே என்று சொல்லி உடனே ஏற்றுக் கொள்ளுகிறார்கள்? மணிக்கணக்காகக் கேட்டு விட்டு, வாரக்கணக் காகச் சேர்ந்து படித்து விட்டு, முடிவெடுக்க மாதக்கணக்கில் நாட்களையும் எடுத்துக் கொண்டு, கடைசியில் என்ன சொல்லு கிறார்கள்? நீங்கள் சொல்லுவதெல்லாம் சரிதான், வசனத்துக்குச் சரியான விளக்கம் கொடுத்தீர்கள். ஆனால், எங்க குடும்பம்... எங்க வேலை... எங்க சபை... எங்க ஊர்... எங்க சமுதாயம்... என்று கூறி அப்படியே இழுக்கிறார்கள் தானே! எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு இப்படியெல்லாம் இழுப்பது எப்படி நியாயமாகும் என்று எண்ணிப்பாருங்கள்? இந்த இடத்தில் அப்போஸ்தலன் பேதுருவும், யோவானும் ஆலோசனைச் சங்கத்தாருக்குக் கொடுத்த பதிலை நினைவுபடுத்த விரும்புகிறேன். "பேதுருவும், யோவானும் அவர்க ளுக்குப் பிரதியுத்திரமாக, தேவனுக்குச் செவி கொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவி கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள்" [அப். 4:19] என்று.

அன்பானவர்களே, இன்றைய கிறிஸ்தவத்திற்கு உடனடித் தேவை துணிவும், மன உறுதியும் கொண்ட மக்கள். அவர்களால் தான் இயேசுவுக்கும், அவருடைய உபதேசத்திற்கும் கீழ்ப்படியும் மனதைப் பெற்றுக் கொள்ள முடியும். நீங்கள் ஒவ்வொருவரும் அப்படிப்பட்ட வர்களில் ஒருவராயிருக்க வேண்டுகிறேன். ஆமென்!. ✭



# ஏன் கிறிஸ்தவம் மிகவும் வித்தியாசமானது?

**J.C. சோட்**

**கி**றிஸ்தவம் உலகெங்கிலும் காணப்படுகிறது. கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் கோடிக்கணக்கான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் செய்தியை எடுத்துச் செல்வதால் அதன் எண்ணிக்கை தொடர்ந்து பெருகிக் கொண்டிருக்கிறது.

கிறிஸ்தவம் என்பது, கிறிஸ்துவை ஒரு மனிதன் என்றோ, மற்றுமொரு பரிசுத்தவான் என்றோ அல்லது இன்னொரு தீர்க்கதரிசி என்றோ விசுவாசிப்பதை அடிப்படையாக் கொண்டிராமல், கிறிஸ்தவம் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்றும், உலகத்தின் பாவத்திற்காக மரித்தவரென்றும், என்றென்றும் ஜீவிக்கும்படியாக கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தவரென்றும் விசுவாசிப்பதை அடிப்படையாகக் கொண்டதாகும். பேதுருவும், அப்போஸ்தலர்களும், கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டார்கள் [மத். 16:16-18]. பரலோகத்திலிருந்து தேவனும், கிறிஸ்துவை தம்முடைய குமாரன் என்று அறிவித்தார் [மத். 17:5].

இன்று உலகத்தில், ஓர் உயிருள்ள தலைவரைக் கொண்டிருக்கும் ஒரே மதம் கிறிஸ்தவம் தான். மற்ற மதங்களின் தலைவர்கள் மரித்தார்கள். ஆனால், மறுபடியும் உயிர்த்தெழ வில்லை. ஆனால், கிறிஸ்து தாம் உயிர்த்தெழப்போவதாகச் சொன்னார். அதைச் செய்து காட்டினார் [யோவான் 11:25; மத். 28:1-6]. அவர் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றாமல் இருந்திருந்தால் அவர் ஒரு பொய்யனாகவோ, வஞ்சகனாகவோ இருந்திருப்பார். அவர் உயிர்த்தெழவில்லையென்றால் கிறிஸ்தவம் ஒருபோதும் வளர்ந்திருக்காது. ஆனால், கிறிஸ்தவம் வாழ்கிறது, சபை வாழ்கிறது, பொதுவான உயிர்த்தெழுதலின் நம்பிக்கை வாழ்கிறது. இவைகள் எல்லாமே கிறிஸ்து வாழ்ந்து கொண்டிருப்பதால் தான் நடக்கிறது.

கிறிஸ்தவம் ஒரு மிகப் புகழ்பெற்ற மார்க்கமாயிருக்கிறது. மற்றெந்த மதம் அல்லது நம்பிக்கையைவிட, நன்மைக்கேதுவாக இந்த உலகை மாற்றுவதற்கு அதிகமாகச் செய்திருக்கிறது; சர்வதேச நாள்காட்டிகள் கிறிஸ்துவின் வாழ்க்கையையும், மரணத்தையும் அடிப்படையாக வைத்தே நாட்களைக் குறிக்கிறது, கிறிஸ்துவின் ஒழுக்க ரீதியிலான போதனைகளை ஆதாரமாக வைத்தே தேசங்களின்

சட்டங்கள் பிரதானமாக இயற்றப்பட்டிருக்கின்றன. பெரும்பாலான நாடுகள் ஞாயிற்றுக்கிழமை விடுமுறையை அங்கீகரிக்கின்றன, நிச்சயமாக, இது கிறிஸ்தவத்திலிருந்து வந்தது தான்; அதாவது, இது கிறிஸ்து வாரத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார், மற்றும் கர்த்தர் தம்மை நினைவு கூரும்படியாகவும், தேவனை ஆராதிக்கும்படியாகவும் வாரத்தின் முதல் நாளிலே கூடி வர வேண்டுமென்று கட்டளையிட்டதையும் அடிப்படையாக வைத்து அமைந்தது தான் [மத். 28:1-6 ; அப். 20:7].

மனிதனுக்குத் தெரிந்த மிக உயரிய ஒழுக்க நெறிகள் கடைப்பிடிக்கப்படுவதற்கு கிறிஸ்தவம் பாடுபடுகிறது. இது நேர்மையாயிருத்தல், ஒருவருடைய கடனைத் திரும்பச் செலுத்துதல், வேலைக்கேற்ற வருமானம், ஒருவரையொருவர் மரித்தல் போன்ற நெறிகளைப் போதிக்கிறது. கிறிஸ்தவம் ஒழுக்க ரீதியிலான உயர்ந்த வாழ்க்கையை ஆதரித்து, குடும்ப முறைகளைப் பாதுகாத்து, ஒருவனுக்கு ஒருத்தி என்ற திருமண உறவின் பாங்கை வலியுறுத்தி, அதோடு மரணபரியந்தம் ஒருவருக்கொருவர் உண்மையாயிருக்க வேண்டுமென்பதையும் எடுத்துரைக்கிறது. கிறிஸ்தவம் எல்லாவற்றிற்கும் தேவனை தலையாக அங்கீகரித்து, புருஷனை மனைவிக்குத் தலையாக வும் அங்கீகரித்து, அதேசமயம், பிள்ளைகளை கர்த்தருடைய வளர்ப்பிலும், எச்சரிப்பிலும் வளர்க்க ஆணுக்கும், பெண்ணுக்கும் தனித்தனியே பொறுப்புகள் இருக்கின்றன என்பதை கிறிஸ்தவம் அங்கீகரிக்கிறது.

கிறிஸ்தவத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறவர்கள் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர் தேவன் தான் என்பதை விசுவாசிக் கிறார்கள் [ஆதி. 1:1]. தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து மனிதர்கள் மத்தியில் வாசம் செய்வதற்காகவும், இந்த உலகத்தின் பாவத்திற்காக சிலுவையில் மரிப்பதற்காகவும் அவர் இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்டவர் என்பதையும் விசுவாசிக்கிறார்கள். கிறிஸ்து இப்படிச் சொன்னார். "*ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்ற உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்*" என்றார் [யோவான் 8:24]. கிறிஸ்தவர்கள், பரிசுத்த ஆவியானவர் பலரை பல நூறு வருடங்களாக தேவனுடைய வார்த்தையை எழுதும்படி ஏவினார் என்றும், வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் ஏவப்பட்டதென்றும், எனவே அது தேவனுடைய வார்த்தை என்றும் விசுவாசிக்கிறார்கள் [II பேதுரு 1:21; தீமோத். 3:16,17; மத். 24:35].

கிறிஸ்து தம்முடைய சபையை ஒரே சபையை, ஏற்படுத்தினார் என்றும், இரட்சிக்கப்பட்டவர்கள் எல்லாம் அதில் சேர்க்கப்பட்டிருக் கிறார்கள் என்றும் நாங்கள் விசுவாசிக்கிறோம்.

மத். 16:18; எபே. 4:4-6, அப். 2:47]. கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த் தெழுதலை' நாங்கள் விசுவாசிக்கிறோம், அந்த நற்செய்தி முழு உலகத்திற்கும் பிரசங்கிக்கப்பட வேண்டும். கிறிஸ்து சொன்னார், "பின்பு, அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்: விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான் " [மாற்கு 16:15,16]. கர்த்தருக்கு கீழ்ப்படிகிற வர்கள் எல்லாரும் இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்தவர்களாகி, வாரத்தின் முதல் நாளில் தேவனை ஆராதித்து, கிறிஸ்துவுக்காக தினமும் வாழ வேண்டும் என்றும் நாங்கள் விசுவாசிக் கிறோம் [மத். 7:21; 1 பேதுரு 4:16; யோவான் 4:24; அப். 20:7; லூக். 9:23].

ஒருவர் கர்த்தருடைய குடும்பத்தில் சரீரப் பிரகாரமாகப் பிறக்க முடியாது. கிறிஸ்தவம் சரீரப் பிரகாரமான பிறப்பினால் வளர்வதில்லை. ஆனால், ஆவிக்குரிய பிறப்பின் மூலமாக வளர் கிறது [யோவான் 3: 3-5]. வேறுவிதமாகச் சொன்னால், கர்த்தர் தம்முடைய சீஷர்களை ஜனங்களிடத்தில் தம்மைப்பற்றி போதிக் கவும், அவர்களிடத்தில் காரணகாரியங்களோடு அவரைப்பற்றி எடுத்துரைக்கவும், கிறிஸ்துவை விசுவாசித்து, அவருக்குக் கீழ்ப் படியவும், அதன் மூலம் அவரால் இரட்சிக்கப்படவும், தேவனு டைய பிள்ளைகளாகும்படி ஜனங்களை சம்மதிக்கச் செய்யவும் அனுப்பினார். "*விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்*" என்று பவுல் நமக்கு நினைப்பூட்டுகிறார் [ரோமர் 10:17]. எபிரெய எழுத்தாளர், "*விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்*" என்றும் சொல்கிறார்.

கிறிஸ்தவம், கடைசியாக எல்லோரும் உயிரோடு எழுந் திருப்பார்கள் என்றும், எல்லோருக்கும் நியாயத்தீர்ப்பு இருக்கு மென்றும், எல்லோரும் தங்கள் நித்தியத்தை பரலோகத்தில் அல்லது நரகத்தில் கழிப்பார்கள் என்றும் போதிக்கிறது. கிறிஸ்து, "*இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால், பிரேதக்குழிகளிலுள்ளவர்கள் அனைவரும் அவருடைய சத்தத் தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிற வர்களாகவும் புறப்படுவார் கள்* " என்றார் [யோவான் 5:28,29]. நாம் இதையும் வாசிக்கிறோம், "*அன்றியும், ஒரேதரம் மரிப்பதும் பின்பு நியாயத் தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே*" என்று [எபி. 9:27] பவுல், "*ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்து வின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்* " என

அறிவிக்கிறார் [II கொரி. 5:10]. நியாயத்தீர்ப்பு நடந்தேறிய பிறகு துன்மார்க்கர் நித்திய ஆக்கினையை அடைவார்கள், நீதிமான்கள் நித்திய ஜீவனை அடைவார்கள் [மத். 25:46].

கிறிஸ்தவம் எதிர்க்கின்ற காரியங்களும் உண்டு. கிறிஸ்தவம் சாத்தானை, இந்த உலகத்தை, மாம்சத்தின் கிரியைகளை எதிர்க் கிறது [I யோவான் 2:15-17; கலா. 5:19-21]. குறிப்பாக, கிறிஸ்த்வம் போர், லஞ்சம், புகைபிடித்தல், சூதாட்டம், மதுபானம் குடித்தல், போதை மருந்துக்களை பயன்படுத்துதல், கருக்கலைப்பு, ஆண் புணர்ச்சி என்று இன்னும் இப்படிப்பட்டவைகளுக்கு எதிரானது. கிறிஸ்தவம், ஜாதிமுறை, விக்கிரக ஆராதனை, பொய்யான மதங்கள், மனிதர்களுக்கு முன்பாகத் தங்களைத் தெய்வங்களாக உயர்த்துவது போன்றவைகளை நிராகரிக்கிறது. கிறிஸ்தவம், மறு அவதாரத்தை நம்புவதில்லை. கிறிஸ்தவம் அதன் அங்கத்தினர்கள் மாம்சம் புசிப்பதைத் தடை செய்வதில்லை. சில மக்கள் விவாகம் செய்வதைத் தடை செய்வதையும், மாம்சம் புசிப்பதிலிருந்து விலகியிருக்கும்படி கட்டளையிடுவதையும் குறித்து பவுல் இப்படியாகச் சொல்கிறார். "*விவாகம் பண்ணாதிருக்கவும், விசுவாசிகளும், சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அனுபவிக்கும்படி தேவன் படைத்த போஜனபதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள். தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படதக்கதல்ல. அது தேவ வசனத்தினாலும், ஜெபத்தி னாலும் பரிசுத்தமாக்கப்படும்*" [I தீமோ. 4:2-5].

நாங்கள் இந்த உலகத்தின் மதங்களிலோ அல்லது கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்ளுகிற மனிதர்களுடைய பிரிவினைச் சபைகளிலோ நம்பிக்கைக் கொள்வதில்லை. ஆனால், மார்க்க சுதந்திரத்தில் நம்பிக்கை வைக்கிறோம். தேவனே, இந்த உலகத் தின் தவறான மதங்களை அங்கீகரிப்பதில்லை. ஆனால், மெய்யான தேவனை ஆராதிப்பதா அல்லது எதிர்ப்பதா என தீர்மானம் எடுப்பதை ஒவ்வொரு தனி நபரிடமே விட்டு விடுகிறார். தன்னுடைய மதத்தை மற்றவர்கள் மீது திணிக்கும் உரிமை எந்த மனிதனுக்கும் கிடையாது. மனிதன், தான் விரும்புகிறபடி தன் ஆத்தும காரியத்தில் சுதந்திர மாகச் செயல்பட முடியாத நிலையில், அவன் உண்மையாகவே சுதந்திரமாக இருக்கிறான் என்று சொல்ல முடியாது. தேவனுடைய வார்த்தை தான், மனிதனை தேவனுக்கு அறிமுகப்படுத்தி, அவன் தன் பாவங்களிலி ருந்து எப்படி விடுதலை பெற முடியும் என்று சொல்கிறபடியால், மெய்யான விடுதலை தேவனுடைய வார்த்தையில் தான் இருகிறது [யோவான் 8:32].

நீங்கள் எந்த மதத்தை ஏற்று நடைமுறைப்படுத்துகிறீர்கள்? நீங்கள் ஏன் நடைமுறைப்படுத்துகிறீர்கள்? சரீரப்பிரகாரமாக அந்த மதத்தில் பிறந்தீர்களா? அல்லது போதனையின் விளைவாக

அதை ஏற்றுக் கொண்டு, இது ஒன்றான மெய்யான வழியை அடையாளப்படுத்துகிறது என்பதை நம்பத் தொடங்கினீர்களா?

உங்கள் மதம் அர்த்தமுள்ளதாக இருக்கிறதா? இன்று உலகம் இருக்கிறது போல உங்கள் மதம் நவீனமாயிருக்கிறதா? அல்லது பழங்கால முறைமைகளின்படி வாழ உங்களை அது அழைத்துச் செல்கிறதா? பகுத்தறிவினடிப்படையிலான, அர்த்தமுள்ள காரியங் களை அது உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறதா? அல்லது உங்களை முட்டாளாக்கி தர்க்க வாதத்திற்கு ஒத்துவராத காரியங் களைச் செய்யும்படி உங்களை வழி நடத்துகிறதா?

ஜனங்கள் வாசிக்கவும், படிக்கவும், சுயமாக முடிவு எடுக்கும் படியான வாய்ப்பு இருக்கும் வரை கிறிஸ்தவத்தில் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. கிறிஸ்தவம் தர்க்கரீதியானது, அர்த்தமுள்ளது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். மேலுமாக, கிறிஸ்துவை விசுவாசிப்பவர் களையும், விசுவாசியாதவர்களையும் பாருங்கள்; கிறிஸ்தவம் அவர் களுக்கு என்ன செய்து கொண்டிருக்கிறது என்று பாருங்கள். கிறிஸ்தவம் அதன் முழு போதனையின்படி கைக்கொள்ளப்படும்போது, ஜனங்களி டத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி, ஜனங்களை ஆவிக்குரிய பிரகாரமாக சிறந்த வாழ்க்கை வாழ வழி நடத்துகிறது. கிறிஸ்தவர்கள் இப்பூமியில் தாங்கள் வாழ்வதற்கான அர்த்தமுள்ள காரணங்கள் இருப்பதாலும், மரணத்திற்குப் பின்னான வாழ்க்கையை எதிர் நோக்கும் எல்லா முகாந்திரமும் இருப்பதாலும் அவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சி யுள்ள மக்களாக இருக்கிறார்கள்.

நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளாதவராக இருந்தால், கிறிஸ்தவத்தை கவனித்துப் பார்க்கும்படியாக நான் உங்களை ஊக்கப்படுத்துகிறேன். வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டுப் பகுதி யில் இது குறித்து வாசியுங்கள். உங்களுக்கு மனமிருந்தால், நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக மாற விரும்புவீர்கள் என்று நான் நம்புகிறேன். மேலும், தேவனையும், தேவனுடைய குமாரனென்று கிறிஸ்துவை விசுவாசிப்ப தாலும், உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புவதினாலும், கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று உங்கள் வாயினால் அறிக்கை பண்ணுவதாலும், உங்கள் பாவ மன்னிப்பிற்காக ஞானஸ்நானம் பெறுவதினாலும் நீங்கள் கிறிஸ்தவராக முடியும் [எபி. 11:6; யோவான் 14:1-3; அப். 2:38]. இதை நீங்கள் செய்யும் போது, கர்த்தர் உங்களை இரட்சித்து, தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார். அதன் மூலம் நீங்கள் கிறிஸ்தவராகவும், கிறிஸ்தவத்தின் ஒரு அங்கமாகவும் இருப்பீர்கள் [அப். 2:47; 1 பேதுரு 4:16]. இது மிகவும் சுலபமான ஒன்றாகத் தெரியவில்லையா? இப்படிச் செய்வது மிகவும் சுலபமானதும், எவ்வித சிக்கலுமற்றது. கிறிஸ்துவின் போதனைகளினடிப்படையில் செய்யும்படி உங்களை ஒப்புக்கொடுக்கத் தயவு செய்து தவறி விடாதீர்கள்.

# எந்தோரில் அஞ்சனம்பார்க்கிற ஸ்திரீ சாமுவேலை எழும்பி வரச் செய்தாளா?

*Max Patterson*

**1 சா**முவேல் 28 ஆம் அதிகாரத்தில் சவுல் மற்றும் எந்தோரியைச் சேர்ந்த அஞ்சனம்பார்க்கிற ஸ்திரீ சம்பந்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே சவுல் நம்பிக்கையற்ற நிலைமையில் இருந்தான். இதற்கு முன்பு சவுல் அஞ்சனம் பார்க்கிறவர்களை மிகவும் அவ மரியாதையுடன் நடத்தி அவர்களை வெறுத்தான். அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறிசொல்லுகிறவர்களையும் சவுல் நிர்மூலமாக்கினான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், இப்போது நம்பிக்கையற்ற நிலையில் இருக்கும் போது அந்த அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ மூலமாக சாமுவேலின் ஆலோசனையை நாட விரும்பினான். ஆனால், சாமுவேல் உயிரோடிருந்த போது அவருடைய ஞானத்தை சவுல் அவமதித்தான்.

அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ, ஆவிகளோடு பேசுகிறவர்கள் வழக்கமாகச் செய்வது போல் செய்தாள். அடுத்து நடந்த காரியம் ஆச்சரியமானது. சாமுவேல் அங்கே தோன்றினார். சாமுவேல் எழும்பி வந்தது உண்மை தான். ஆனால், இது அந்த ஸ்திரீயின் மந்திரத்தால் நிறைவேற்றப்படவில்லை. ஏனெனில், அவள் அங்கே நடந்த சம்பவத்திற்கு ஆயத்தமாகாமல் இருந்தாள். உண்மையில், அவள் சாமுவேல் எழும்பி விடுவார் என்று எதிர்பார்க்கவில்லை. அவர் எழும்பி வந்தது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்தக் காரியத்தில் அந்த ஸ்திரீயை விட சவுலுக்கு அவன் மேல் நம்பிக்கை அதிகமாக இருந்தது.

சாமுவேல் எழுந்து வந்தது அந்த ஸ்திரீயின் வல்லமையினாலோ அல்லது பிசாசின் முகமையினாலோ அல்ல. அது மாயமந்திரமுமல்ல. அங்கே சவுலையும், அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயையும் கடிந்து கொள்ளும்படி காரியங்கள் நடந்தது. நடந்தது தெளிவாகவே ஓர் அற்புதம்தான். சாமுவேல் சவுலுக்குக் கொடுத்த செய்தியில் அற்புதத்தின் உண்மைத் தன்மை நிரூபணமாகிறது. வசனம் 19-ல் கர்த்தர் உன்னுடைய ஜனமாகிய இஸ்ரவேலரையும் பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுப்பார்; நாளைக்கு நீயும், உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள்; இஸ்ரவேலின் பாளையத்தையும் கர்த்தர் பெலிஸ்தரின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றான். சாமுவேல், பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலுக்கெதிரான யுத்தத்தில் வெற்றி பெறுவார்கள், சவுலும், அவருடைய குமாரர்களும் இதில் செத்துப் போவார்கள். இந்த விபரங்கள் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீக்கோ, சாத்தானுக்கோ அவனுடைய ஏவலாளுக்கோ தெரியாது.

எனவே, தேவ ஆவியினால் ஏவப்பட்டுத்தான் வெளிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

ஆகவே, சாமுவேல் சவுல் ராஜாவுக்கு முன்பாக தோன்றியது அஞ்சனத்தினாலல்ல. மாறாக, தெய்வீக இடைபாட்டினால்தான் தோன்றினார். அங்கே நடந்த காரியத்தின் நோக்கம் அந்த ஸ்திரீயையும், சவுலையும் கடிந்து கொள்வதற்காகத்தான். இந்த சம்பவம் மாய வித்தையில் நம்பிக்கை வைக்க எவ்விதத்திலும் இடங்கொடுக்க வில்லை. நடந்த சம்பவத்தில் எந்த மாயமந்திரமும் இல்லை. அதுபோல, அந்த அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ தன்னுடைய வல்லமையினால் சாமுவேலை எழும்பி வரச் செய்யவும் இல்லை.

# பதினைந்தாம் வேனிற்கால வேதாகம முகாம் பற்றிய துளிகள்

**மே 7-9,2012 ஏலகிரி மலை**

| | |
|---|---|
| கலந்து கொண்ட மாநிலங்கள் | - 4 |
| கலந்து கொண்ட சபைகள் | - 41 |
| கலந்து கொண்ட நகரங்கள் | - 45 |
| கலந்து கொண்ட நபர்கள் | - 400க்கு மேல் |
| திருமுழுக்குப் பெற்றவர்கள் | - 8 |
| பயனடைந்த சபைகள் | - 5 |

இம்முகாமின் வெற்றிக்காக ஊக்கமாய் ஜெபித்த, உற்சாகமாய் கொடுத்து உதவிய உங்கள் ஒவ்வொருவருக்கும், தேவனுடைய வார்த்தைகளை வல்லமையாய் எடுத்து விளம்பிய தேவதாசர்கள் யாவருக்கும், விசுவாசிகளை திரளாக அழைத்து வந்த கனத்திற்குரிய ஊழிய சகோதரர்கள் அனைவருக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– ஆசிரியர்.

பெண்கள் பகுதி

# பெத்தானியா "மரியாள்"

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே, இம்மாதமும் உங்களோடு சேர்ந்து பெத்தானியாவில் வாழ்ந்த மரியாளைப் பற்றி படித்து தெரிந்து கொள்ள கர்த்தர் கொடுத்த கிருபைக்காய் அவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த மரியாளைப் பற்றி புதிய ஏற்பாட்டில் லூக்கா 10:38-41; மற்றும் யோவா 11; 12;1-3 ஆகிய வசனப்பகுதிகளில் பரிசுத்த ஆவியானவர் நமக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்.

நமதாண்டவரும், அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து, "மனுஷ குமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை" என்று கூறுகிறார். முப்பது ஆண்டுகாலம் தன் பெற்றோருடன் நாசரேத்தில் வளர்ந்து, வாழ்ந்து பிறகு ஊழியத்தின் பாதைக்கு அடியெடுத்து வைத்து $3^1/_2$ ஆண்டு காலமும் மீண்டும் தான் வளர்ந்த ஊருக்கு வந்து, இளைப்பாறி, ஓய்வெடுத்ததாக நாம் வேதத்தில் வாசிக்க முடியாது. அவர் தன் கால்களால் சுற்றித் திரிந்தே பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார். அவ்வாறு சுற்றித் திரிகையில், தாம் இளைப்பாற தெரிந்தெடுத்த இடம் பெத்தானியா. இந்த பெத்தானியாவில் தான் மார்த்தாள், மரியாள், லாசரு என்ற மூவரும் வாழ்ந்து வந்தார்கள். இயேசு அடிக்கடி இவர்கள் வீட்டிற்குச் சென்று தங்கி இளைப்பாறியிருக்கிறார் என்று வேதத்தில் நாம் வாசிக்கிறோம்.

மார்த்தாள், மரியாள் இருவருமே இயேசுவை அதிகம் நேசித்தார்கள். இயேசுவும் இவர்களில் அன்புள்ளவராக இருந்தார். ஆனால் உலகக் காரியங்களுக்கு முக்கியம் கொடுக்க அவள் சரீரமும், மனதும் உடன்படுவதேயில்லை. எப்போதும் உள்ளூர ஒரு சிந்தையுடையவளாகவே இருந்து வந்தாள். ஆழமான, ஆவிக்குரிய சிந்தையை பெற்றுக் கொண்டிருந்த இந்த மரியாள், வெளியுலக காரியங்களில் தன் வேகத்தைக் குறைத்து, தன் சிந்தனைக்கும், மனதுக்கும் அதிக வேலையும், வேகமும் கொடுத்து வாழ்ந்து கொண்டுவந்தாள். இப்பேர்ப்பட்ட மரியாளிடம் நாம் சில பாடங்களை கற்றுக் கொள்ள தேவன் உதவி செய்வாராக.

**முதலாவது, அவள் ஒரு ஆவிக்குரிய மாணாக்கி :**

இயேசுவின் புனிதமான பாதத்தருகே அமர்ந்து, மாசற்ற உண்மையை வாஞ்சித்து கேட்பதற்கு, அமைதியாகவும், சமாதானமாகவும் தன்னை அமர்த்துவது, மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் விருப்பமாயிருந்தது. புதிய ஏற்பாட்டில் பார்க்கும் மற்றவர்கள் எல்லாரிலும் இயேசுவின் பாதத்தோடு தன்னை சம்பந்தப்படுத்திக் கொண்டு, தன்னை தாழ்த்தி, மரியாதையோடும், ஆவிக்குரிய அறிவைப் பெற்றுக்

கொள்ள பசியோடும் இருந்தவள் இந்த நம் மரியாள் தான். இயேசுவின் விருப்பத்தையும், அவருடைய வாயிலிருந்து புறப்படும் வார்த்தையின் மேலும் ஒரு ஆவலும், ஒரு நம்பிக்கையு முடையவளாய் இருந்த தினால் அவர் பாதத்தில் அமர்ந்து கேட்பதை மிகவும் விரும்பினாள். அப்போஸ்தலனாகிய பவுல் தான் கற்றதைக் குறித்து கூறும் போது, நான் யூதன், சிலிசியா நாட்டிலுல்ல தர்சு பட்டணத்திலே பிறந்து, இந்த நகரத்திலே கமாலியேவின் பாதத்தருகே வளர்ந்து.... நானும் வைராக்கியமுள்ளவனாயி ருந்தேன் [அப். 22:3] என்று கூறுகிறார். போதகர்களுக்கெல்லாம் போதகராயிருக்கிற நமதருமை இரட்சகர் இயேசு பன்னிரண்டு வயதாய் இருக்கையில், அவர் கற்றுக் கொண்டதைப் பற்றி பேசும் போது, "மூன்று நாளைக்குப் பின்பு, அவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிற தைக் கேட்கவும் அவர்களை வினாவவும் கண்டார்கள்" [லூக்கா. 3:46] என்று லூக்கா ஆசிரியர் கூறுகிறார். இப்பேர்ப்பட்ட கற்றுக் கொள்ளும் இதயத்தை மரியாள் பெற்றிருந்ததினால் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை பெற்றுக் கொண்டாள். அருமையான சகோரதரிகளே நாமும் அவர் பாதத்தை வாஞ்சித்து, நாடி, மணிக் கணக்காய் அவர் பாதத்தில் விழுந்து கிடந்து நல்ல பங்காகிய இரட்சிப்பை பெற்றுக்கொள்வோம்.

**இரண்டாவதாக, மரியாள் துக்கம் கொண்ட ஒரு ஸ்திரீ :**

மார்த்தாள், மரியாள் இருவருமே தாங்கள் அதிகம் நேசித்த லாசருவின் மரணத்தில் துக்கமுடையவர்களாக இருந்தார்கள். ஆனால், மரியாளின் கண்ணீர் பற்றித்தான் வேதம் பேசுகிறது. இயேசு வருகிறார் என்று மார்த்தாள் கேள்விப் பட்டபோது, அவருக்கு எதிர்கொண்டு போய், ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான் என்றாள் [யோ. 11:21] மரியாளோ வீட்டில் உட்கார்ந்து தன் துக்கத்தை இன்னும் அதிகப்படுத்தினவளாக இருந்தாள். போதகர் உன்னை அழைக்கிறார் என்பதைக் கேட்ட மரியாள் எழுந்து போய், அவரைக் கண்டவுடனே அவர் பாதத்தில் விழுந்து [யோ. 11:32] அழுதாள் [11:33] இவள் கண்ணீரைக் கண்ட நம் இயேசு ஆவியிலே கலங்கி, துயர மடைந்து அவரும் கண்ணீர் விட்டார். இவர்தான் நம் இயேசு. நம் கண்ணீருக்கு பதில் செய்கிறவர் நம் இயேசு. காலம் தாழ்த்தினாலும் நம் கண்ணீரை காணாமல் இருக்க அவர் மனது கல் அல்ல. எனவே, அருமையானவர்களே, மரியாளின் கண்ணீருக்கு பதில் கண்ணீர் விட்ட இயேசு நம் கண்ணீரையும் துடைப்பார். ஆனால், நம்மில் அநேகர் கண்ணீர் விடுவதே இல்லை கண்ணீர் விடுவது கேவலம் என்று நினைக்கிறோம். கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது [பிலி. 2:5] என்று வாசிக்கிறோம். அப்படியானால் கிறிஸ்து அழுதார். நாமும் ஆத்துமாவில் பாரம் கொண்டு கண்ணீர் விட்டு அழுவோம்.

**மூன்றாவதாக, மரியாள் ஓர் பலனுள்ள ஊழியக்காரி :**

பெத்தானியாவின் மரியாள் மூலமாக யூதர்களில் அநேகர் இயேசுவிடம் விசுவாசமுள்ளவரானர்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. செத்து, நாலு நாள் ஆகிய மரியாளின் சகோதர னாகிய லாசருவை உயிரோடு எழுப்பிய மகா சம்பவம் பற்றி பேசவும், எழுதவும் நமக்கு அறிவு போதாது. தேவனிடம் சித்தமும், இயேசுவின் மூலம் அவர் மகிமைப்படுவதும் நம்மை வியப்பில் ஆழ்த்துவதோடு, ஆறுதலையும், நம்பிக்கையையும் கொடுக்கிறது. மரியாள் எழுந்து இயேசுவை நோக்கி போகிறதைப் பார்த்த யூதர்கள் அவள் பிறகேயே போகிறார்கள். மரியாளின் அழுகை மற்றவர்களை, அதுவும் இயேசுவை மேசியாதான் என்று நம்ப மறுத்த யூதர்களையே அவர் பின்னே போக வைத்தது [11:31] அப்படி போனதினால் இயேசுவின் மேல் விசுவாசம் வைத்தார்கள். அப்பொழுது மரியாளிடத்தில் வந்தி ருந்து, இயேசு செய்தவைகளைக் கண்டவர் களாகிய யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர் களானார்கள் [யோ. 11:45]. நாமும் மரியாளைப் போல ஆத்துமாக்கள் உயிர்ப் பிக்கப்பட கண்ணீரோடு ஊழியம் செய்வோம்.

**நான்காவதாக, மரியாள் நன்றியுள்ள கொடுக்கும் உள்ளம் கொண்டவள்:**

லாசருவை உயிரோடு எழுப்பினதிற்கு நன்றிக் கடன் செலுத்தும் படியாக பெத்தானியாவில் சீமோன் என்கிறவன் வீட்டில் ஒரு விருந்து ஆயத்தப்படுத்தப்படுகிறது. 'அப்பொழுது மரியாள் விலையேறப் பெற்ற களங்கமில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு கிராத்தல் கொண்டு வந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால் நிறைந்தது [யோ 12:3]. இச்சம்பவம் மத். 26:6-13, மற்றும் மாற்கு 14:3-9, [யோ: 11:1; 12:1-11] ஆகிய வசனங்களில் இடம் பெற்றி ருக்கிறது. இந்த நன்றிக்கடன் செலுத்தும் இந்த விருந்தில் நம்மை சிந்திக்க வைப்பது என்னவென்றால், மரியாளின் எந்த ஒரு உரையாடலையும் நாம் காணமுடியாது. மரியாள் எதுவும் பேசவில்லை! மரியாள் உட்கார்ந்து, கவனித்துக் கொண்டிருந் தாள். ஒன்றும் பேசவில்லை [யோ. 10:39]. லாசருவின் கல்லறை யினருகில் மரியாள் அழுதாள் ஒன்றும் பேசவில்லை. சீமோனின் வீட்டில் அவர் நற்கிரியை செய்கிறாள். ஒன்றும் பேசவில்லை. ஒரே ஒரு முறை மரியாள் பேசினாள் என்றால், அது மார்த்தாள் சொன்னதை திருப்பி சொன்ன போது தான் [யோ. 11:32]. அமைதியான அன்பு வல்லமையான ஆயுதம், உலகத்தில் பேச்சாளர்களால் செய்யப் பட்டவைகள் அல்ல. மரியாள் இயேசுவின் பாதத்தில் பூசின தைலம் மிகவும் விலையுயர்ந்தது. அந்த தைலம் இன்னும் உலகம் முழுவதும் மணம் வீசிக் கொண்டுள்ளது.

மரியாளின் தைலம் அநேகருக்கு மணம் வீசினாலும் சிலருக்கு அது வீண் என்று தோன்றியது. பண ஆசை பிடித்த யூதாசுக்கு அது

வீணாக தெரிந்தது. இன்னும் உலகத்தில் நறுமணம் மிக்க சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்கு பைத்தியமாய் தோன்றுகிறது. மரியாளின் செயல் அங்கீகரிக்கப்படுகிறது. அருமை இரட்சகர் இயேசு கிறிஸ்து அவளை தொந்தரவு செய்கிறவர்களைப் பார்த்து, அவளை விட்டு விடுங்கள் ஏன் அவளை தொந்தரவுபடுத்துகிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியைச் செய்திருக்கிறாள். [மாற்கு : 14:6] என்கிறார். மரியாளின் செயல் நினைவுகூறப்படத்தக்க ஒன்றாக இருந்தது. நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து அவள் செயலை அங்கீரித்ததோடு நின்று விடாமல் நன்றிக்கு பதில் நன்றியாக ஒருபடி மேலே சென்று, இந்தச் சுவிசேஷம் உகத்தில் எங்கே பிரசங்கிக்கப்படுமோ, அங்கங்கே இவளை நினைப்ப தற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். நமக்கு உயர்ந்த பலன் தேவனிடத்தில் இருந்து கிடைக்க வேண்டுமென்றால் அது அவரின் பாதத்தில் இருக்கிறது. மரியாளைப் போல அவர் பாதத்தில் அமர்ந்து, மறுமையில் நித்திய ஜீவனை அவரிடத்திலிருந்து பெற்றுக் கொள்வோம். இந்த உண்மையை மோசே உபாகமத்தில் கூறும்போது ".... ஜனங்கள் உம்முடைய பாதத்தில் விழுந்து, உம்முடைய வார்த்தைகளினால் போதனையடைவார்கள் " [உபா : 33:3]. ஆமென்! ✩

## நாளும் நடப்பும்

1. *சென்னையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நான்கு வழித்தடங்களில் மோனோ ரயில் திட்டம் - முதல்வர்*
2. *ஆயிரம் கோடியில் குழாய் மூலம் வீடுகளுக்கு எரிவாயு செயல்படுத்தப்படும். - தமிழக அரசு*
3. *குடியரசு தலைவர் தேர்தல் சூடுபிடித்திருக்கிறது.*
4. *கோஷ்டி பூசலை ஒழித்தால் தான் காங்கிரஸ்க்கு வெற்றி - சோனியா*
5. *அரசுப்போக்குவரத்து கழகத்தில் 16,661 பணி இடங்கள் நிரப்பப்படும்.*
6. *காவிரிப் பாசன கட்டமைப்புக்கு 1,560 கோடி - முதல்வர்*
7. *கிரிக்கெட் : ஐபிஎல் போட்டிகள் உச்சக்கட்டத்தை அடைந்து வருகிறது.*

# நிழலும், நிஜமும்

***(The Shadow and the Reality)***

**Bro. ஜே.ஆ. ஜேம்ஸ் ராஜ்குமார்**

அன்பானவர்களே,

**செ**ன்ற மாதத்தில் இயேசுவின் சகோதரரான யாக்கோபின் பிரசங்கத்தையும், அதன் பிறகு அப்போஸ்தலர்கள், மூப்பர், சபையாரால் எடுக்கப்பட்ட முடிவையுங்குறித்து பார்த்தோம். இந்த மாதத்தில் அவர்களின் முடிவை ஒரு நிருபமாக எழுதி அதை எல்லா சபைகளிலும் வாசிக்கும்படியாக கொடுத்தனுப்பினார்கள் என்பதை கவனிக்கப் போகிறோம்.

நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது அவர்கள் எழுதின கடிதத்தின் சாரம்சம், அப்போஸ்தலனாகிய பேதுரு மற்றும் மூப்பரான யாக்கோபு இவர்களுடைய வார்த்தையைப் போல இந்தக் கடிதமும் முக்கியமானது ஆகும். அவர்களின் பேச்சை அங்கு எருசலேமின் கூட்டத்தில் இருந்தவர்கள் தான் கேட்டிருக்க முடியும். ஆனால், அவர்கள் எழுதின கடிதம் வெவ்வேறு நாடுகளில், பட்டணங்களில் இருந்த சபையார் படித்து பார்த்து தெளிவு அடைய முடியும், மற்றவர் களுக்கும் அதைக் கொடுத்தனுப்ப முடியும்.

அந்தக் கடிதத்தில், அதை எழுதினவர்கள் யார் என்பது விளக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அப்போஸ்தலரும், மூப்பரும், சகோதரரும் அதாவது சபையாரும் எழுதினார்கள். அதைப் பெற்றுக் கொண்டவர்கள் யாரென்றால் அந்தியோகியாவிலும், சீரியாவிலும், சிலிசியாவிலும் இருக்கும் புறஜாதியாராகிய சகோதரர்கள் அதாவது புறஜாதியிலிருந்து கிறிஸ்தவர்களான சகோதர சகோதரிகளுக்கு அல்லது சபையாருக்கு இந்த நிருபம் எழுதப்பட்டது. ஆனால், இது தேவனுடைய வார்த்தை ஆயைால், இன்றைக்கு இது எல்லோருக்கும் பொருந்தும், யாருக்கெல்லாம் இந்த விளக்கம் தேவையாக இருக்கிறதோ அவர் களெல்லாம் இதைப் பெற்றுக் கொண்டவர்களாக இருக்கிறோம். கடிதத்தை கவனிப்போம்: எங்களால் கட்டளைப் பெறாத சிலர் [அப். 15:24] என்று அந்த கடிதம் ஆரம்பிக்கிறது. அந்தக் கடிதத்தின் ஆரம்ப வார்த்தையே அந்தக் கூட்டத்தின் தீர்ப்பை தெளிவாக வெளிப் படுத்துகிறது. அது என்னவென்றால் நியாயப்பிரமாணமாகிய பழைய உடன்படிக்கையை புறஜாதியிலிருந்து கிறிஸ்தவர்களான வர்கள் கைகொள்ள வேண்டும் என்று போதித்தவர்கள் அப்போஸ் தலர்களால் மூப்பர்களால் அல்லது எருசலேம் சபையாரால் அனுப்பப்படாதவர்கள். முக்கியமாக அவர்கள் அப்போஸ்தலர் களால் அனுப்பப்படவில்லை. அப்போஸ்தலர்களால் அனுப்பப்படவில்லை என்பதின் அர்த்தம் என்று நாம் கவனிக்க வேண்டும்.

அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவாகிய கர்த்தரிடம் சத்தியத்தை நேரடியாக கற்றுக்கொண்டவர்கள் அல்லது அறிவாக்கப்பட்டார்கள் [எபி. 2:3] அதாவது கிறிஸ்துவானவர் அவர்களுக்கு நேரடியாக போதித்தார். கிறிஸ்துவுக்குப் பிறகு பரிசுத்த ஆவியானவர் வந்து கிறிஸ்துவின் வார்த்தைகளை அப்போஸ்தலர்களுக்கு போதித்தார். பரிசுத்த ஆவியான வரும் அதே வார்த்தைகளை அப்போஸ்தலர்களுக்கு அறிவிப்பார். எனவே, அப்போஸ்தலர்கள் போதித்த உபதேசம் [அப். 2:42-ல் அப்போஸ்தலருடைய உபதேசம் என்று சொல்லப்பட்டுள்ளது] என்று பரிசுத்த ஆவியானவரின் உபதேசம் அல்லது கிறிஸ்துவின் உபதேசம் நிறைவாக இது தேவனுடைய உபதேசம்.

அப்போஸ்தலர்கள் இந்த உபதேசத்தை அல்லது போதனையை எருசலேம் சபையிலே போதித்தார்கள். அதை கேட்டு தேர்ச்சி பெற்றி ருந்தவர்கள். எருசலேம் சபைக்கு மிகுந்த துன்பம் உண்டானபோது சத்தியத்தில் அப்போஸ்தலர்களால் தேர்ச்சி பெற்றிருந்த சபையார் யூதேயா, சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள். இந்த சிதறிப் போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணினார்கள் [அப். 8:1,4] இவர்கள் போதித்தது அப்போஸ்தலர்களால் போதிக்கப்பட்ட கிறிஸ்துவின் உபதேசம் ஆகும். அப்போஸ்தலர்கள் சொல்லிக் கொடுத்த உபதேசத்தை அவர்கள் போதித்ததினால் அவர்கள் அப்போஸ்தலர்களால் போதிக்கப்பட்டு அனுப்பப்பட்டவர்களாகவும் கூட நாம் எண்ணிக் கொள்ளலாம். ஆனால், இந்த சகோதரர்கள் அப்போஸ்தலர்கள் போதித்த சத்தியத்தை பேசாமல் அப்போஸ்தலர்களால் போதிக்கப்படாத அல்லது கட்டளையிடப்படாத ஒரு கருத்தை தங்கள் சொந்த இஷ்டமாக சொன்னார்கள். ஆகையால், அப்போஸ்தலர்கள் "புறஜாதிகள் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும்" என்கிற கருத்தை ஒரு போதும் போதித்திருக்க வாய்ப்பில்லை. அப்படி அப்போஸ்தலர்கள் இந்தக் கருத்தை போதித்திருந்தால் இவர்கள் எங்களால் கட்டளைப் பெறாதவர்கள் என்று சொல்லியிருக்கமாட்டார்கள். அதன் அர்த்தம் என்னவென்றால், பரிசுத்த ஆவியானவரோ அல்லது கிறிஸ்துவோ அல்லது தேவனோ இவர்களை இந்த போதனையை செய்யும்படி அனுப்ப வில்லை அல்லது இந்த போதனை தேவனுடையதோ அல்லது கிறிஸ்து வினுடையதோ அல்ல என்பது தெளிவாயிருக்கிறது.

இன்றைக்கும் அநேகர் நியாயப்பிரமாணமாகிய பழைய ஏற்பாட்டை நாம் கடைபிடிக்க வேண்டும் என்று பிடிவாதமாக போதிப்பவர்கள் தேவனால் அனுமதி பெற்றவர்களாகவோ கிறிஸ்துவால் [அப்போஸ்தலர்களால்] அனுப்பப்பட்டவர்களாகவோ இருக்க முடியாது என்பது இந்த ஒரு வார்த்தையிலிருந்து தெளிவாகிறது.

தேவனால் கட்டளைப் பெறாமல் தங்கள் சொந்த இஷ்டமாக பேசுகிறவர்கள் யார்? அவர்களின் நிலை என்ன என்பதைப் பற்றி மோசே சொல்லும் போது [தேவன் சொல்லும் போது] சொல்லும்படி நான் கட்டளையிடாத வார்த்தையை என் நாமத்தினாலே சொல்லத்துணியும்

தீர்க்கதரிசியும்..... "சாகக்கடவன் என்று உபா. 18:20-ல் எச்சரிக்கிறார்". மேலும் எரேமியா தீர்க்கதரிசனத்தில், "உங்களுக்கு தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் [பொய் தீர்க்கதரிசிகளின்] வார்த்தை களை கேளாதிருங்கள்; அவர்கள் உங்களை வீண் பெருமை கொள்ளும் படி செய்கிறார்கள்; கர்த்தருடைய வாக்கை அல்ல, தாங்கள் யூகித்த தரிசனத்தைச் சொல்லுகிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லு கிறார். [எரே. 23:16] "அந்தத் தீர்க்கதரிசிகளை நான் அனுப்பாதிருந்தும் அவர்கள் ஓடினார்கள்; அவர்களோடே நான் பேசாதிருந்தும் அவர்கள் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்" என்கிறார். [எரே. 23:21] மேலும், "இதோ, தங்கள் நாவின் சொல்லையே வழங்கி அவர் அதை உரைத்தார் என்று சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார். [எரே. 23:31] என்று சொல்லப்பட்டிருக்கிறது.

யூத மார்க்கத்திலிருந்து கிறிஸ்தவர்களான சகோதரர்கள் தேவனுடைய வார்த்தையை அல்ல தங்கள் யூதத்தை சொன்னார்கள் என்பது தெளிவாகிறது. அவர்கள் தேவனுடைய கருத்தை அல்ல தங்கள் கருத்தை வலியுறுத்தி தேவனுடைய சத்தியத்தை பேசுகிற அப்போஸ் தலனாகிய பவுலையும், பர்னபாவையும் துன்புறுத்தினார்கள். இது இப்பொழுதும் நடக்கிறது. புதிய ஏற்பாட்டு சத்தியத்தை மாத்திரம் கைக்கொள்ள வேண்டும் என்று போதிக்கிற ஊழியக்காரர்களை அற்பமாக பேசி அவமானப்படுத்துகிற நிகழ்ச்சிகள் இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறது. இதைக் குறித்து இன்னும் விபரமாக பிறகு பார்க்கலாம்.

"எங்களால் கட்டளை பெறாத [தேவனால் அனுமதிக்கப்படாத] சிலர் எங்களிடத்திலிருந்து புறப்பட்டு" என்று எழுதுகிறார்கள். இதன் அர்த்தம் இந்த கள்ளப் போதனையை கொண்டு சென்றவர்கள் யூதேயாவி லிருந்து விசேஷமாக எருசலேமிலிருந்து, சபையிலிருந்து சென்றார்கள் [அப். 15:1] ஆகையால், அவர்களை நாங்கள் அனுப்பவில்லை என்பதை தெளிவுப்படுத்துகிறார்கள். அவர்கள் எருசலேமிலிருந்து வந்ததால் இந்த போதனையை அப்போஸ்தலர்கள் போதித்து அனுப்பினார்களோ என்கிற சந்தேகம் அப்பொழுது பரவியிருந்திருக்க வேண்டும். அந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டாக அவர்கள் எங்களிடத்திலி ருந்து வந்திருந்தாலும் அவர்களை நாங்கள் அனுப்பவில்லை அவர்கள் போதிக்கிற உபதேசத்தை நாங்கள் கற்றுக் கொடுத்து அனுப்பவில்லை அது எங்களுடைய உபதேசம் அதாவது அப்போஸ்தலருடைய உபதேசம் அல்ல என்பதை தெளிவாக எழுதியிருக்கிறார்கள்.

ஆனால், இன்றைக்கு அப்போஸ்தலர்களின் சபை என்று பெயர் மாத்திரம் வைத்துக் கொண்டு அப்போஸ்தலர்களால் கட்டளையிடப் படாத அல்லது போதிக்கப்படாத போதனைகளை போதித்துக் கொண்டி ருக்கிறார்களே அவர்களின் நிலைமை என்ன என்பதை நாம் யோசிக்க வேண்டும். பிற்காலங்களில் பேதுரு எழுதும்போது "கள்ளத் தீர்க்கதரிசி களும் உங்களுக்குள்ளே இருந்தார்கள்.... அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுக்களை தந்திரமாய் நுழையப் பண்ணி" னார்கள் என்று கூறுகிறார் [2பேதுரு 2:1].

அப். 15:24-ல் கடிதத்தில் "எங்களால் கட்டளைப் பெறாத சிலர் எங்களிடத்திலிருந்து புறப்பட்டு, நீங்கள் விருத்த சேதனமடைய வேண்டுமென்றும், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டு மென்றும் சொல்லி இப்படிப்பட்ட வார்த்தைகளால் உங்களைக் கலக்கி, உங்கள் ஆத்துமாக்களைப் புரட்டினார்கள் என்று நாங்கள் கேள்விப் பட்டபடியினாலே" என்று எழுதினார்கள். இதிலிருந்து மிகத் தெளிவாக இந்த கள்ளப் போதனையினால் என்ன விளைவு வந்தது என்பதை தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். முதலாவது அவர்கள் [கள்ளப் போதகர்கள்] கலக்கினார்கள் என்று நமக்கே தெரியும். ஒரு குடம் பாலில் சிறு அளவு விஷம் கலந்தாலும் அதை நாம் சாப்பிட முடியாது. அந்த விஷம் கலந்ததால் அந்த பால் முழுவதும் கலப்படமாக பிரயோஜனம் அற்றதாக போய் விட்டதைப் போல அப்போஸ்தலர்களால் போதிக்கப்பட்ட தூய சத்தியத்தோடு பழைய ஏற்பாட்டையும் கைக்கொள்ள வேண்டும் என்கிற தவறான போதனை கலக்கப்பட்டால் முழு சத்தியமும் கெட்டுப் போய் விடும் என்பதுதான் அதன் அர்த்தமாயிருக்கிறது. இதன் விளைவாக என்ன நடக்கும்? தூய்மையில்லாத அந்தப் பாலை அருந்துவதினால் அதைக் குடிக்கிறவர்களும் பாதிக்கப்படுவார்கள். ஏனென்றால், தேவனுடைய வசனம் களங்கமில்லாத ஞானப்பாலாயி ருக்கிறது [1பேதுரு 2:3].

மேலும், அந்தக் கடிதத்தில் புரட்டினார்கள் என்று அந்தக் கடிதத்தில் எழுதினார்கள். அதுவும் அவர்கள் ஆத்துமாக்களைப் புரட்டினார்கள். அதாவது பரலோகத்திற்கு நேராக சென்று கொண்டிருக் கக்கூடிய ஆத்துமாக்களை புரட்டி [வேறு பாதைக்கு மாற்றி] கொண்டு செல்வது ஆகும். இதற்காக ஒரு உதாரணத்தை நாம் சொல்லலாம். ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு ஒரு திட்டத்தோடு சென்று கொண்டிருக்கக்கூடிய ஆகாய விமானத்தை சில தவறான மக்கள் அதன் வழியை, திட்டத்தை மாற்றி கடத்தி செல்வதைப்போல இதுவும் இருக்கிறது. அந்த விமானம் போய் சேர வேண்டிய இடத்திற்கு பதிலாக வேறு ஒரு பாதுகாப்பற்ற, ஆபத்தான சூழ்நிலைக்கு செல்லுவதைப் போல பரலோகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஆத்துமாவை நரகத்தை நோக்கிக் கடத்திச் செல்வதைப் போல இருக்கிறது.

இந்த நோக்கத்திற்காக தங்கள் பிராணனையும் ஒப்புக் கொடுக்க துணிந்தவர்களாக பர்னபா பவுல் என்பவர்களை அடுத்த வசனம் சுட்டிக் காட்டுகிறது. அவர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காக இதைச் செய்தார்கள். கிறிஸ்துவின் மேல் அவர் சத்தியத்தின் மேல் அவர் கொடுத்த பரலோக வாக்குத்தத்தங்கள் மேல் நம்பிக்கை வைத்து செய்தார்கள். இந்த நிருபத்திற்கு சாட்சியாக யூதாவையும், சீலாவையும் அனுப்பினார்கள். அவர்கள் வாய்மொழியாக இதை உறுதி செய்தார்கள் [அப். 15:25-27] எவையென்றால் "விக்கிரகங்களுக்கு படைத்தவைக ளுக்கும், இரத்தத்திற்கும் நெருக்குண்டு செத்ததிற்கும், வேசித் தனத்திற்கும் நீங்கள் விலகியிருக்க வேண்டுமென்பதே. அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள் மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக்

கண்டது; இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக் கொள்வது நலமாயிருக்கும். சுகமாயிருப்பீர்களாக என்று எழுதினார்கள். அவர்கள் அனுப்பிவிடப்பட்டு, அந்தியோகியாவுக்கு வந்து சபையைக் கூடி வரச் செய்து நிருபத்தை ஒப்புவித்தார்கள்". [அப். 15:28-30].

இதில் நாம் கவனிக்க வேண்டியது இந்த காரியம் என்பது இந்த சத்தியம், புதிய ஏற்பாட்டுச் சத்தியம் அல்லது நியாயப்பிரமாணத்தை புறஜாதிகள் கைகொள்ள வேண்டிய அவசியமில்லை என்கிற உண்மை. மேலும், அப். 15:31-ம் வசனத்தை வாசிக்கும்போது அதினால் அவர் களுக்கு ஆறுதல் உண்டானதாக கவனிக்கிறோம். அதுமட்டுமல்ல அந்த ஆறுதலுக்காக சந்தோஷப்பட்டார்கள். எனவே நியாயப் பிரமாணத்தைக் கைகொள்ள வேண்டும் என்கிற போதனை அந்தகால சீஷர்களுக்கு வேதனையான காரியமாக இருந்திருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

ஆகையால், இன்றைக்கு பாரமானவைகளை நீக்கி விட்டு சில சட்டங்களை சேர்த்துக்கொண்டு புதிய உபதேசத்தை ஏற்படுத்தினார்கள் என்று அறிகிறோம். இன்னும் அநேக காரியங்களை தொடர்ந்து நாம் வரப்போகிற மாதங்களில் கவனிப்போமாக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பவராக!. ☆

(தொடரும்)

## தெரிந்து கொள்ளுங்கள்

1. ஒருவர் தவறாகப் போதிக்கப்பட்டு சரியாக ஞானஸ்நானம் பெற முடியாது (ரோ. 10:17)
2. ஒருவர் தவறாக ஞானஸ்நானம் பெற்றுவிட்டு சரியாக ஆராதிக்க முடியாது (ரோ. 6:3,4; அப். 2:42)
3. ஒருவர் தவறாக ஆராதித்து விட்டு, சரியாக வாழ முடியாது (யோ. 4:23,24)
4. ஒருவர் தவறாக வாழ்ந்து விட்டு, சரியாக மரிக்க முடியாது (மத். 25:31-41)
5. ஆகவே, ஒருவர் தவறாக ஞானஸ்நானம் பெற்றுவிட்டு, சரியாக மரிக்க முடியாது.

வாலிபர் பகுதி

# வாலிபனே வலையைப் போடு

**Bro. பென்னிமார்ட்டின்**

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக! வாலிபர்களாகிய உங்கள் யாவரையும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன், அதோடு இந்தக் கட்டுரையின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். பொதுவாகவே, இன்று சமுதாயத்தில் நாம் பார்க்கும் போது முதியவர்களுக்குத் தான் தேவ பக்தி யிருக்கிறது, ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த வேண்டுமென்கிற வாஞ்சையிருக்கிறது, வாலிபர்களுக்கு இவைகளெல்லாம் இல்லை என்கிற கருத்து நிலவுகிறது. ஆனால், வேதாகமத்தின் காலங்களில் நாம் பார்க்கும்போது வாலிபர்கள் வல்லமையாக தேவனுக்காக எழும்பிப் பிரகாசித்திருப்பது நமக்குத் தெளிவாகிறது. இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் வாலிபர்கள் சுவிசேஷ வலையை விரித்து தேவனுக்காக அநேக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த தேவ தாசனாகிய பேதுருவிட மிருந்து பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டும்.

லூக்கா ஐந்தாம் அதிகாரத்தில் பேதுருவின் விசுவாசத்தை சோதிக்கும்படியான ஒரு சவாலான சம்பவத்தை நாம் வாசிக்கி றோம். பேதுரு இரா முழுவதும் பிரயாசப்பட்டு மீன் பிடித்தும் ஒன்றும் அகப் படாததால் களைப்படைந்து கரையிலே வலைகளை அலசிக் கொண்டி ருந்தார். அவ்வழியாக வந்த இயேசு தன்னோடு படகில் ஏறும்படி பேதுருவுக்கு அழைப்பு விடுத்து, கடற்கரையோரத்தில் கூடியிருந்த ஜனங்களுக்கு போதகம் பண்ணும்படிக்கு படகைக் கரையிலிருந்து சற்று தள்ளும்படி பேதுருவைக் கேட்டுக்கொண்டார். ஜனங்களுக்கு போதித்த பிறகு இயேசு பேதுருவை திரும்பிப்பார்த்து, ஆழத்திலே தள்ளிக் கொண்டு போய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலையைப் போடுங்கள்" என்றார். அதன்பலன் ஆச்சரியப்படத்தக்கதாய் இருந்தது! அவர்கள் தங்கள் வலைகள் கிழிந்து போகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். அப்பொழுது மற்ற படவிலிருந்த கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவி செய்யும் படிக்குச் சைகை காட்டினார்கள்; அவர்கள் வந்து, இரண்டு படவுகளும் அமிழத்தக்கதாக நிரப்பினார்கள். பேதுரு அதைக்கண்டு ஆச்சரியப்பட்டு இயேசுவின் பாதத்தில் விழுந்து, அவருடைய சமூகத்தில் இருப்பதற்கு தான் பாத்திரன் அல்ல என்று ஒப்புக் கொண்டார். அப்பொழுது இயேசு பேதுருவை நோக்கி; பயப் படாதே, இது முதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார். அப்பொழுது பேதுருவும், அவருடைய கூட்டாளிகளும் பிடித்த மீன்களை கரையிலே கொண்டு சேர்த்து விட்டு, எல்லாவற்றையும் விட்டு இயேசுவுக்குப் பின் சென்றார்கள்.

இந்த சம்பவத்திற்குப் பிறகு பேதுரு விசுவாசத்தில் உறுதியாக எப்போதும் இராவிட்டாலும், பல சூழ்நிலைகளில் விளைவைப் பற்றி கவலைப்படாமல் துடிப்பாக காரியங்களை செய்திருந்தாலும், பின்பு மனுஷரைப் பிடிக்க சென்ற போது படகில் அவர் கற்றுக் கொண்ட

பாடத்தை நினைவு கூர்ந்தார். பெந்தெகொஸ்தே நாளிலே எருசலேமில் திரளான கூட்டத்திற்கு பேதுரு பிரசங்கித்ததை லூக்கா, அப்போஸ்தல ருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் பதிவு செய்திருக்கிறார். அந்த நாளில் பேதுரு சுவிசேஷ வலையை விரிக்க வேண்டும் என்பது தேவனுடைய திட்டமாயிருந்தது. ஆனால் பேதுருவால் அது சரியான நேரம் அல்ல, சரியான இடம் அல்ல என்று வாதாடியிருக்க முடியும். ஏனென்றால், அதே இடத்தில் தான் இயேசு சில நாட்களுக்கு முன்பு கொல்லப்பட்டார், இதே ஜனங்கள் தான் நம்முடைய ஆண்டவரை துன்மார்க்கமான கைகளால் சிலுவையில் அறைந்தார்கள்! எனவே, இங்கே வெற்றி கிடைப்பதற்கான வாய்ப்பே இல்லை என்று மறுக்க முடிந்திருக்கும். ஆனால், பேதுரு தேவ திட்டத்திற்கு தன்னை ஒப்புக் கொடுத்து, தேவனுடைய அறிவுரையின்படி பேதுரு சுவிசேஷ வலையை விரித்தார். அதிலே ஏறக்குறைய மூவாயிரம் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டார்கள்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் அதிகாரத்தில் பேதுரு புறஜாதிகள் மத்தியிலே சுவிசேஷ வலையை விரிக்கும்படியாக பணிக்கப்பட்டதை நாம் வாசிக்கிறோம். அப்படிச் செய்ய தொடங்கு வதற்கு அது சரியான காலம் என தரிசனத்தின் மூலமாக அவருக்கு அடையாளமாகக் காட்டப்பட்டது. பேதுரு சுவிசேஷ வலையை விரித்த போது, அது கொர்நேலியு மற்றும் அவனுடைய வீட்டாரனைவராலும் நிரப்பப்பட்டது. ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பேதுருவினால் விரிக்கப்பட்ட சுவிசேஷ வலை இன்றும் பெலனுள்ளதா யிருக்கிறது [ரோமர் 1:16]. தன்னுடைய பிற்காலத்தில் பேதுரு நரை முடியுடையவராய், அனுபவமிக்கவராய் இந்த வார்த்தைகளை எழுதினார். "மாம்சமெல்லாம் புல்லைப் போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப் போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்கு சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே" [1பேதுரு 1:24,25].

வாலிபர்களே, தேவ தாசனாகிய பேதுரு சுவிசேஷ வலையை விரித்தது நீங்கள் அந்த வலையை விரிக்க தூண்டு கோலாக இருக்கிறதா? சுவிசேஷ வலை உங்கள் கைகளில் தான் இருக்கிறது அதை விரியுங்கள்! எப்போது அதை விரிக்கலாம் சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் அதை விரிக்க வேண்டுமென்பது தேவனுடைய கட்டளையாயிருக்கிறது [2தீமோ. 4:2]. யாருக்கு அதை விரிக்கலாம் என்கிற கேள்வி எழும்புமானால் சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தா ருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் என்பது வேதாக மத்தின் பதிலாயிருக்கிறது [வெளி. 14:6]. வாலிபர்களாகிய நாம் ஆத்தும அறுவடையில் ஈடுபடும் போது விசுவாசமில்லாதவர்கள் அதை எதிர்ப்பார்கள். அவர்கள் பழங்காலத்து சுவிசேஷம் இந்த நவீன காலத்திலே எடுபடாது என்று உங்களிடம் சொல்வார்கள். நம் கர்த்தர் நீங்கள் வலையைப் போட்டு விட்டு விளைவை அவரிடத்தில் விட்டு விட வேண்டும் என உங்களுக்கு கட்டளையிடுகிறார். அவருடைய வார்த்தைக்கு செவி கொடுப்பீர்களா?

சிறுவர் பகுதி

# இயேசு யாருடைய குமாரன்?

Bro. ABEL R. NAYAGAM

எனதருமை சிறு தம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். கோடை விடுமுறை நாட்களை ஜாலியாக கழித்துக் கொண்டிருப்பீர்கள். அப்படித்தானே? அதே நேரத்தில் விடுமுறை முடியப் போகிறதே என்ற கவலையும் ஆரம்பித்திருக்கும் என்று நினைக்கிறேன் என்ன? நான் நினைப்பது சரியா? எப்படியானாலும், தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் வேத அறிவை வளர்த்துக்கொள்ளும் விஷயத்தில் எப்போதும் ஆர்வம் காட்டுவது நமக்கு ஆசீர்வாதமாய் அமையும்.

சரி, இம்மாதம் நாம் என்ன பார்க்கப் போகிறோம் தெரியுமா? இயேசு இவர் யாருடைய குமாரன்? இதைப்பற்றி வேதாகமம் கூறும் கருத்துக்கள் என்ன என்பதன் முழு விவரத்தை கற்றுக் கொள்ளப்போகிறோம்.

மத். 22:42-ல் இயேசு பரிசேயர்களை நோக்கி கிறிஸ்துவை யாருடைய குமாரன் என்று நினைக்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள் "நீர் தாவீதின் குமாரன்" என்று பதில் கூறினார்கள். அப்படி யானால், அவர் யார்? வசனங்கள் அவரை யாருடைய குமாரன் என்று சொல்கிறது? அதைப்பற்றி தான் நாம் பார்க்க இருக்கிறோம்.

### I இயேசு மரியாளின் குமாரன்

யோசேப்போடே சேருவதற்கு முன்பாகவே மரியாள் பரிசுத்த ஆவியின் மூலம் கர்ப்பவதியானாள் [மத். 1:18,20,25]. காபிரியேல் தூதனைக் கொண்டு லூக். 1:31-ல் இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு "இயேசு" என்று பேரிடுவாயாக என்று தேவன் கூறினார். அப், 1:14-ல் "இயேசுவின் தாயாகிய மரியாள்" என்று நாம் வாசிக்கிறோம். ஏசாயா 7:14-ன் படியாகவும், கலா. 4:5-ன் படியாகவும் இயேசு மரியாளின் மூலம் மனித சாயலாய் பிறந்தார் என்று அறிகிறோம்.

### II இயேசு மனுஷ குமாரன்

மத். 16:13ல் – "மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார என்று சொல்லுகிறார்கள்" என்று கேட்டார். இப்படி அவர் சொன்ன தினாலே அவருடைய "தாழ்மை" வெளிப்படுகிறது. எப்படி? அவருக்கு சரீர ரீதியாக ஒரு தாய் இருந்ததினால் அவர் மனித ரூபமாய் பிறந்தார். அவர் மாம்சமாகி நமக்குள்ளே வாசம் செய்தார். [யோவான் 1:14; பிலி. 2:7-ல் "மனுஷர் சாயலானார்" என்று வாசிக்கிறோம். எபி. 2:14-ல் "அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும், இரத்தத்தையும் உடைய வரானார்" என்று வாசிக்கிறோம். இவையெல்லாம் எதற்காக? பாவிகளாகிய நம்மை இரட்சிக்க அப்படியானார்.

## III இயேசு தேவ குமாரன் :

தூதனாகிய காபிரியேல் லூக். 1:35-ல் என்ன சொல்கிறான் தெரியுமா? "உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்" மாற் 1:1ல் "தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று வாசிக்கிறோம். மாற். 14:60-62-ல் நாம் வாசித்தால், பிரதான ஆசாரியன் இயேசுவை நோக்கி "நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா?" என்று கேட்ட பொழுது, இயேசுவும் "நான் அவர் தான்" என்று மறு உத்தரவு கொடுத்தார். மனுஷ குமாரன் என்பது அவருடைய மனுஷ தன்மையைக் காட்டுகிறது. தேவ குமாரன் என்று சொல்லும் பொழுது தேவத்துவத்தை அது காட்டுகிறது.

## IV இயேசு - தாவீதின் குமாரன்

யூதர்கள் இயேசுவை தாவீதின் குமாரன் என்று சொன்னார்கள். [மத். 22:42] ஏனென்றால், தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்ட காரியங்களை அவர்கள் அறிந்திருந்தார்கள். எந்த தீர்க்க தரிசனம்? II சாமு. 7:12-14; சங். 132:11; ஏசா. 11:1; மத். 1:1ல் "தாவீதின் குமாரனை இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு" என்று வாசிக்கிறோம். ரோமர் 1:5; 2 தீமோ. 2:8; அப். 2:29-30 இந்த வசனங்கள் யாவும் இயேசு கிறிஸ்துவை "தாவீதின் குமாரன்" என்றே வர்ணிக்கிறது. தீர்க்க தரிசனங்கள் உரைக்கப்பட்டன; அவை நிறைவேறியது. இன்று இயேசு கிறிஸ்து சபையை ஆண்டு கொண்டிருக்கிறார். [லூக். 1:31-33]

## V இயேசு ஆபிரகாமின் குமாரன் :

இதுவும் ஒரு வாக்குத்தத்தின் நிறைவேறுதல் ஆகும். ஆதி. 12:3; 22:18-ல் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் மத். 1-ம் அதிகாரத்தில் நிறைவேறியது. கலா. 3:16-ல் "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன. சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்து சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார்". அந்த சந்ததி கிறிஸ்துவே.

மேலே நாம் வாசித்தப்படி, கிறிஸ்து யார் யாருடைய குமாரன் என்று நாம் வசன ஆதாரங்களோடு பார்த்தோம். சரி, இது நமக்கு எப்படி பயனாயிருக்கிறது?

நீங்கள் கூர்ந்து வாசித்தால், அவை ஒவ்வொன்றிலும் தனித் தன்மை வாய்ந்ததாகவும், விசேஷமானவைகளாகவும், இயேசு கிறிஸ்துவின் சிறப்பை வெளிப்படுத்துகிறதாகவும் இருக்கிறது என்று கவனித்திருப்பீர்கள்.

இப்படி பல சிறப்புக்கு சொந்தகாரரான அவர், இவை எல்லா வற்றையும் அசட்டை செய்து, ஒரு பொருட்டாக எண்ணாமல், உங்க ளுக்காகவும், எனக்காகவும் மரிக்க துணிந் தார். மரித்தார் அடடா, அன்புக்கு இதுதானே சரியான எடுத்துக் காட்டு?!!

இத்தனை அன்பு பாராட்டிய அவர் மீது நாமும் சார்ந்திருந்தால், அவர் எவ்வளவு சந்தோஷப்படுவார்? அது நமக்கு எவ்வளவு ஆசீர்வாதமாய் இருக்கும்? என்ன அவருக்கு பிரியமாய் இருப்பீர்களா? இருங்கள்! அளவில்லா ஆசீர்வாதம் கண்டிப்பாக உண்டு. ☆

# பாடம் - 19 சபையில் புருஷர்களின் கடமை

Bro. K. பாஸ்கர்

அன்பான திருமறை ஆசான் வாசகர்களுக்கு,

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள் பல. தொடர்ந்து இம்மாதத்திலும் உங்களோடு இந்த பாடத்தை படிப்பது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். தேவன் தாமே இந்த தொடர் பாடத்தின் மூலமாக வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை உங்களுக்கு வெளிப்படுத்துவாராக!

இன்றுள்ள சபைகளில் புருஷர்கள் வாயிருந்தும் ஊமையர்களாக இருக்கின்றார்கள். பெண்கள் தான் வேதம் வாசிப்பதும், சத்தம் போட்டு ஜெபம் செய்து கூக்குரலிடுவதுமாக செயல்பட்டு வருகின்றனர். ஆண்கள் அமைதலுடன் தங்களுக்கு எந்த கடமை யுமில்லாமல் செயல்பட்டு வருகின்றனர். ஆனால், கிறிஸ்து கட்டின சபையில் பெண்கள் அமைதியாக இருக்க வேண்டும். ஆண்களுக்கென்று கடமைகளைத் தேவன் கொடுத்துள்ளார் என்பதை இந்தப் பாடத்தில் அறிந்து கொள்ளுவோமாக!

## I. புருஷர்கள் ஆளுகைத் தன்மை கொண்டிருக்க வேண்டும்

தேவன் மனிதனைப் படைத்து இவ்வுலகத்திலுள்ள அனைத்து மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியிலுள்ள ஊறும் பிராணிகளையும், தன் மனைவியையும் ஆளக்கடவான் என்று கட்டளையிட்டார் [ஆதி. 1:26; ஆதி. 3:16] அதுமுதல் உலகத்தை ஆளுகை செய்தவர்கள் புருஷர்கள் தான். ஸ்திரீகள் அல்ல! வேதாகமத்திலும் எஸ்தர் ஒரு ராணியாக இருந்தும் அகாஸ்வேரு ராஜாவே ஆளுகை செய்திருக்கிறார் [எஸ். 1:1].

தேவன் ஆதியிலிருந்தே தமது கட்டளைகளை புருஷர் களிடமே கொடுத்திருக்கின்றார். உதாரணமாக, ஆதாமிடம் கனியைப் பற்றிய கட்டளையைக் கொடுத்தார். பின்பு நோவாவிடம் பேழையைக் குறித்த கட்டளையைக் கொடுத்தார். நியாயப் பிரமாணத்தின் காலத்தில் மோசேயிடம் பத்துக்கட்டளையைக் கொடுத்தார். பின்பு புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து சுவிசேஷத்திற்குரிய கட்டளையை அப்போஸ்தலரிடம் கொடுத்தார் [மாற். 16:15]. அப்போஸ்தலர்கள் சபையிலுள்ள புருஷர் களிடம் சுவிசேஷத்தைக் கொடுத்தார்கள் [அப். 8:4] இன்று சபையி லுள்ள புருஷர்கள் சுவிசேஷத்தைச் சொல்ல கடமைப்பட்டிருக் கிறார்கள் [1கொரி. 9:16] இவ்விதமாக புருஷர்கள் சபையிலே ஆளுகை செய்கின்றனர் [1கொரி. 12:28] ஆனால், இன்றுள்ள புருஷர்கள்

தங்கள் மனைவிமார்களை சபையிலே ஆட வைத்து வேடிக்கை பார்க்கிறார்கள்! அன்பான சகோதரரே, அப்படிப்பட்ட சபை கிறிஸ்து கிறிஸ்துவினால் கட்டப்படவில்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள்! நீங்களே அவர்களை ஆளவேண்டும் அவர்கள் உங்களை ஆளக் கூடாது. அப்படி அவர்களுக்கு [பெண்களுக்கு] அடங்கியிருந்தால் தேவன் உங்களைத்தான் கணக்குக் கேட்பார். ஏனென்றால், தேவன் உங்களிடம் தான் பொறுப்புகளைக் கொடுத்திருக்கிறார். உதாரணமாக, ஆதாமைக் கூப்பிட்டு நீ எங்கு இருக்கிறாய்? என்று தேவன் கேட்டார் [ஆதி. 3:9] கடமை தவறிய காயீனைப் பார்த்து உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார் [ஆதி. 4:9] யோசபேல் என்ற ஸ்திரீக்கு பயந்து ஒளிந்து கொண்டு எலியாவைப் பார்த்த தேவன் இங்கே உனக்கு என்ன காரியம்? என்றார் [1 இராஜா 19:9] பிரசங்கிக்கும் தன் கடமையைப் புறக்கணித்து கப்பலில் நித்திரை செய்து கொண்டிருந்த யோனாவைப் பார்த்து மாலுமி நீ நித்திரை பண்ணுகிறதென்ன? என்று கேட்டார். இந்த சம்பவங்களிலிருந்து நாம் புரிந்து கொள்வது புருஷர்களுக்கென்று தேவன் கடமையைக் கொடுத்துள்ளார் [1 பேதுரு 3:7] அவர்களை ஆள வேண்டியது உங்கள் கடமை! அவர்களுக்கு அடிபணிந்தால் தேவன் உங்களைத்தான் கணக்குக் கேட்பார் ஸ்திரீக்கு புருஷன் தலையாக இருக்க வேண்டும் வாலாக இருக்கக் கூடாது [1கொரி. 11:3].

## II. புருஷர்கள் பரிசுத்தமாக இருக்க வேண்டும்

இன்றைய நாட்களில் தேவனைத் தேடுவதில் ஸ்திரீகள் தான் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். புருஷர்கள் அதிக ஆர்வம் காட்டு வதில்லை. ஏனென்றால், புருஷர்கள் நிறைய அசுத்தமான செயல் களைச் செய்வதால் அவைகளிலிருந்து தப்பிக்க மனமில்லாமல் இருக்கிறபடியால் ஸ்திரீகளே பரிசுத்தமாக இருக்கின்றனர். ஆனால், முதல் நூற்றாண்டில் திரளான புருஷர்களும், ஸ்திரீகளும் விசுவாச முள்ளவர்களாகிக் கர்த்தரிடம் அதிகமதிகமாய் சேர்க்கப்பட்டார்கள் [அப். 5:14]

ஸ்திரீகளைக் காட்டிலும் புருஷர்களே அதிக பரிசுத்தமாக நடந்து கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். ஆதலால், சபையில் புருஷர்கள் பரிசுத்தமான தங்கள் கைகளை உயர்த்தி ஜெபம் செய்ய வேண்டும் என தேவன் கூறுகின்றார். [1 தீமோத். 2:8] ஆனால், இன்றுள்ள வாலிப புருஷர்கள் துவங்கி எல்லா புருஷர்களும் தங்கள் தலை முடியை நீளமாக வளர்த்திக் கொண்டும் காதுகளில் கடுக்கான்களைப் போட்டுக் கொண்டும் அழுக்கான ஜீன்ஸ் அணிந்து கொண்டும், ஒட்டுப் போட்ட பேண்ட் போட்டுக் கொண்டும் சபையாருக்கு முன்னாடி நின்று கொண்டு வசனத்தைப் பேசுகின்றனர்! சபையார் வசனத்தைக் கவனிக்க மாட்டார்கள். அவர்களுடைய கோலத்தைதான் கவனிப்பார்கள்! ஆண் ஆணாக இருக்க வேண்டுமே தவிர ஆண் பாதி, பெண் பாதி வேஷத்தைப் போடக் கூடாது. பரிசுத்தம் என்பது தேவன் பழைய ஏற்பாட்டில் வஸ்திரம்,

தலைமுடி, தாடி இருக்குமிடம், கழிப்பிடம், உணவு மற்றும் உள்ளம், எல்லாம் பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார் [லேவி. 11:19,20] அவைகள் எல்லாம் நமக்கு பாடமாக உள்ளது [1கொரி. 10:11]. புதிய ஏற்பாட்டில் புருஷர்கள் மயிரை நீளமாய் வளர்க்கிறது கனவீனமாக இருக்கிறது என்று தேவன் சொல்லுகிறார் [1கொரி. 11:14] சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமுமாயும் செய்யப்படக்கடவது [1கொரி. 14:40] உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கை எல்லாவற்றி லேயும் பரிசுத்தராயிருங்கள் [1பேதுரு 1:15] இது விசயமாக உங்களை நீங்களே நிதானித்துப் பாருங்கள். உங்கள் சுபாவமே உங்களுக்குப் போதிக்கும்.

பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரை தொழுது கொள்ள வேண்டும் [சங். 96:9] பரிசுத்தமில்லாமல் தேவனை தரிசிக்க முடியாது [எபி. 12:14] எனவே, நம்முடைய நடை, உடை, பாவனை எல்லாம் பரிசுத்தவான்களுக்கேற்றபடி நம்முடைய செயல்கள் இருக்க வேண்டும். அசுத்தமான வேசித்தனமும், பொருளாசை யினால் வெற்றிலைப் பாக்கு, புகையிலை, பீடி, சிகரெட், ஊதுபத்தி போன்றவை களை வாங்கவும், விற்கவும் கூடாது [எபே. 5:3] பரிசுத்த புருஷர்களாக இருக்க வேண்டும் [1 தெச. 4:5].

## III. புருஷர்கள் கிறிஸ்துவின் வளர்ச்சியில் பூரணராக இருக்க வேண்டும்.

நாம் கிறிஸ்துவின் ஆவிக்குரிய வளர்ச்சியில் பூரண புருஷராக வளர வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். [எபே. 4:11] நாம் கிறிஸ்துவுக்குள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தை களைப் போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையா யிருங்கள் [1பேதுரு 2:1-3]. கிறிஸ்துவுக்குள் ஒருவர் ஞானஸ்நானம் பெறும்போது கிறிஸ்துவுக்கள் குழந்தையாக இருக்கின்றார். அவர் தேவனுடைய வசனத்தின் மீது ஆர்வமாக இருந்து படிக்கும் பொழுது கிறிஸ்துவுக்குள் வளருகின்றார். முழு வளர்ச்சி அடைய வேத வாக்கியங்களை ஆராய்ந்துப் பார்த்து நற்குணசாலிகளாக இருந்து கிறிஸ்துவின் வளர்ச்சியில் பூரணராக இருப்பது நமது கடமையாகும் [அப். 17:11].

நாம் கிறிஸ்துவின் வளர்ச்சியில் பூரணராகாதபடிக்கு அநேக விசயங்களில் தவறுகின்றோம் ஒருவன் சொல் தவறாதவனானால் அவன் பூரண புருஷனாயிருக்கிறான் [யாக். 3:2]. கொரிந்து பட்ட ணத்திலுள்ள கிறிஸ்துவின் சபையார் இரட்சிக்கப்பட்டு பல வருஷங்களாகியும் ஆவிக்குரிய வளர்ச்சியில் புருஷர்களாக வளராமல் குழந்தைகளாகவே இருந்தனர். ஆதலால் பவுல் அப்போஸ்தலன் அவர்களுக்கு முதலாம் நிருபத்தை எழுதினார். அதில் சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல் மாம்சத்திற்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேச வேண்டியதாயிற்று நீங்கள் பெலனில்லாதவர்களானதால் உங்களுக்குப் போஜனங்கொடாமல் பாலைக் குடிக்கக் கொடுத்தேன்.

இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால் இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை. பொறாமையும், வாக்குவாதமும், பேதங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால் நீங்கள் மாம்சத்துக்குரியவர் களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்கள் என்றார் [1 கொரி. 3:1-3].

அவர்களில் அநேகர் வேதாகமத்தை நன்கு அறிந்தவர்களும் ஒன்றரை வருடம் வேதாகமப் பயிலகத்தில் படித்தவர்களாகவும் இருந்தார்கள் [அப். 18:11]. ஆனால், அவர்கள் தான் குழந்தைகளாக இருந்தார்கள். பிரிவினை, விபச்சாரம் போன்ற பாவங்களை பற்றி உணர்வில்லாதவர்களாக இருந்தனர்.


இன்று நம்மில் அநேகர் வேதாகமத்தை நன்கு கற்றறிந்தும் இப்படிப்பட்ட பாவங்களைக் குறித்து உணர்வில்லாதவர்களாக இருப்பதால் இப்படிப்பட்ட தவறுகளை செய்து கொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட யாவரும் கிறிஸ்துவில் குழந்தைகளாக மாம்சத்திற்குரியவர்களாக இருக்கிறார்கள். அன்பான சகோதரர்களே புருஷர்களாக வாருங்கள் [1 கொரி. 16:11] இந்த உலகமும் அதின் இச்சையும் நம்மை கிறிஸ்துவுக்குள் வளரவிடாமல் செய்யும். நாம் அவைகளை உதறித் தள்ளி விட்டு பரிசுத்தத்தோடு தேவ பயத்தோடே பூரணராகக் கடந்து போவோம். கிறிஸ்துவின் வளர்ச்சியில் பூரண புருஷர்களாக வளருவோமாக! [2கொரி. 7:1]

## கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும் மனிதனுடைய நிலை

1. தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கு வெளியே இருக்கிறான் (எபே. 1:3)
2. தேவனுக்கு சத்துருவாக இருக்கிறான் (யாக். 4:4)
3. ஜெபிக்கும் உரிமை இல்லாதவனாயிருக்கிறான் (நீதி. 28:9; யோ. 9:31)
4. வஞ்சிக்கப்படுகிறான், குழப்பமடைகிறான், சந்தேகத்திற்கு ஆளாகிறான் (2 தெச. 2:10,11)
5. மேலெழுந்த வாரியான, நிலையற்ற சந்தோஷத்தைத்தான் பெற முடியும் (எபி. 11:25)
6. தனியாகப் பாடுகளை அனுபவிக்க வேண்டும் (2 பேதுரு 3:12)
7. நித்திய ஆக்கினைக்கு சுதந்திரவாளியாக இருக்கிறான் (மத். 25:46)

# BIBLE MEDITATION

## TV PROGRAM




**கிருபையுள்ள வார்த்தை** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : **சகோ. பிலேமோன் ராஜா**, மதுரை.

**பொதிகை TV சனி காலை 5:30 மணி**


**தமிழன் TV ஞாயிறு இரவு 10:00 மணி**

**கிறிஸ்துவின் வசனம்** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : **சகோ. அர்ச்சுணன்**, வத்தலக்குண்டு.

**தமிழன் TV திங்கள் காலை 6:00 மணி**

**தமிழன் TV சனி காலை 6:15 மணி**



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

# திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| பொதிகை TV | ஞாயிறு | காலை | 5:30 | மணி |
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

Regd. News Paper RNI No. 47661/87
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.

**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014**


சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட

**சத்தியத்தின் குரல்**

என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும். - ஆசிரியர்



**முகாமில் பகல் நேர வகுப்பின் போது...**



**முகாமில் பங்கு பெற்ற தேவ ஊழியர்கள்**



**முகாமில் உணவு இடைவேளையின் போது...**